# தேடல் விழுதுகள்



தேடல் கலை இலக்கிய அமைப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேடல் விழுதுகள்

A. KUGAN
78, 2nd LANE
ANANDAPURI
TRINCO

தொகுப்பாசிரியர் அ. கௌரிதாசன்

வெளியீடு:

தேடல் இலக்கிய அமைப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேடல் விழுதுகள்**

○**கவிதைகள் / சிறுகதைகள்** ○**தொகுப்பாசிரியர்:** அ.கௌரிதாசன், ○**விலாசம்:** ஆலங்கேணி, கிண்ணியா ○**©:** தேடல் இலக்கிய அமைப்பு ○**முதற் பதிப்பு:** 2018 ○**வெளியீடு:** தேடல் இலக்கிய அமைப்பு, ○**அட்டை, பக்க வடிவமைப்பு:** எம்.ஏ.எம். அஸ்மி (பேனா பப்ளிகேஷன்), கிண்ணியா, தொ.இல: 0779300397, ○**அச்சுப் பதிப்பு:** ஏ.ஜே. பிரின்ட், தெஹிவளை, ○**பக்கங்கள்:** 94, ○**விலை:** 260/= ○**ச.த.நூல். இல:** 978-955-0932-31-3

**THEDAL VILUTHUHAL**

○**Poems / Short Stories** ○**Author:** A.Gowrithasan , ○**Address:** Alankerny, Kinniya ○**©:** Thedal Ilakkiya Amaippu ○**First Edition:** 2018 ○**Publication:** Thedal Ilakkiya Amaippu,○**Layout & Cover Designed:** M.A.M. Asmy (Pena Publication, Kinniya, T.P: 0779300397 ○**Printed By:** AJ Print, Dehiwela ○**Page:** 96, ○**Price:** 260/- ○**ISBN:** 978-955-0932-31-3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ் மொழி வாழ்த்து

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழியவே!
வான மளந்த தனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழியவே!

ஏழ்கடல் வைப்பினும் தன் மனம் வீசி
இசைகொண்டு வாழியவே!
எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழியவே!

சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்
துலங்குக வையகமே!
தொல்லை வினைதரு தொல்லை யகன்று
சுடர்க தமிழ்நாடே!

வாழ்க தமிழ்மொழி வாழ்க தமிழ்மொழி
வாழ்க தமிழ்மொழியே!
வானம் அறிந்த தனைத்தும் அறிந்து
வளர்மொழி வாழியவே!

**சுப்ரமணிய பாரதியார்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேடல் கீதம்

(இசைப் பாடல்)

(எடுப்பு)

தேடல் கலை கலந்தால்
செம்மைத் தமிழ் துலங்கும்,
நாடல் நலமாகுமே - அதனை
நாடல் நலமாகுமே! (தேடல்)

(உடனெடுப்பு)

ஆடல் கலையினது
அழகும் அதன் இணைப்பாம்,
பாடல் கலையினது
பாங்கும் கலக்கும் பெரும்... (தேடல்)

(தொகுப்பு)

கூடல் கலைக்குரிய
கொள்கை தனை மறைப்பின்
மூடல் கலை வந்தெலாம்
மூடிமறைத்திடலாம்? (தேடல்)

வாடல் கலை பலவும்
வந்து கலக்கு மெனில்
ஓடல் கலை நேரலாம் - அதன்
உச்ச நிலை தாழலாம்? (தேடல்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீண் டுயர்க!

ஆடல் விழுதுகள் பல்
    லாயிரம் ஆயிரம் உண்டாம்?
தேடல் விழுதுகளை ஒன்று
    சேர்த்து வலு வாக்கலாம்?

பெரும் ஆலந் தருவுக்குப்
    பெருங்காய் படைக்காமல்
சிறுகாய் படைத்தோனும்
    சிந்தனைக்குரியோனே!

தேடல் கலைக் கலப்பின்
    தேடல் விழுது கட்கென்
பாடல் பயன் படுக,
    பாடு பட்டவர் வாழ்ந்திடுக!

வாழ்த்துகிறேன் பல்லாண்டும்
    வாழ்கவென - தலை தன்னைத்
தாழ்த்துகிறேன், முத்தமிழின்
    தக்ககலை நீண்டுயர்க!

**'தாமரைத் தீவான்'**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேடலின் வரலாறும் வளர்ச்சியும்

தேடல் கலை இலக்கிய அமைப்பு 2017.12.16 அன்று சமூக வலைத் தளமான முகநூலில் ஆரம்பிக்கப்பட்டது. இவ் இலக்கிய அமைப்புக்கான பெயரை வினைச் சொற்களுக்கான பெயர்ச் சொல்லாகக் கொள்ளப்படும். 'தேடல்" எனும் பெயரைக் கொண்டு ஆரம்ப உறுப்பினர்களாக, ஒன்பது உறுப்பினர்களைக் கொண்டு, தேடல் கலை இலக்கிய அமைப்பு எனும் பெயரோடு அமைக்கப்பட்டது.

தமிழ் இலக்கிய கலை, கலாசாரத்தை வளர்க்கும் நோக்கத்திலும் இலைமறை காயாக மறைந்திருக்கும் கவிஞர்களையும், எழுத்தாளர் களையும் வெளிச்சம் போட்டு சமுதாயத்தின் முன்னிறுத்தி வாய்ப்புத் தேடி ஓய்ந்து களைத்த இலக்கிய ஆர்வலர்களுக்கு களமமைத்துக் கொடுக்கும் வகையிலும் கல்விக்கும் அறிவுக்கும் அப்பால் ஒரு மனிதனிடம் தேடலும் இருக்க வேண்டுமென்பதனை வலியுறுத்திக் காட்டவும் இவ் அமைப்பு அமைக்கப்பட்டது.

இவ் அமைப்பின் முதற்கட்ட செயற்பாடாக, கல்வியிலும், அறிவியல் கருத்துக்களிலும் கூட, உண்மைத் தன்மையை உறுதி செய்வதற்குத் தேடல் இருக்க வேண்டும்.

தேடலே ஒரு மனிதனை நெறிப்படுத்து மென்பதனைக் கருத்திற் கொண்டு இவ் இலக்கிய அமைப்பு உழகத் தமிழர்களை வலைத்தளத் தில் ஒன்றிணைத்து இலக்கியப் போட்டிகளை நடத்தி அவர்களை உற்சாகப் படுத்தும் நோக்கில் இணையவழிச் சான்றிதழ்களை வழங்கி கவிஞர்களையும், எழுத்தாளர்களையும் வளர்த்தெடுத்துள்ளது. சமூக வலைத்தளத்தில் மட்டும் தன் சேவையை விருட்சிமாக்கிய இவ் அமைப்பானது தனது இருப்பினை அகில இலங்கை ரீதியாகவும் உறுதி செய்து கொள்வதற்காக கிழக்கிலங்கையில் முப்பது வருடங்களுக்கு மேலாக கலை கலாசார பண்பாட்டுப் பாரம்பரிய நிகழ்வுகளைப் பேணிப் பாதுகாத்து வளர்த்துக் கொண்டிருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய நிலா கலா மன்றத்தின் இலக்கியப் பிரிவில் (DCA/06/02/TEMP/AMP/036) எனும் குறியீட்டில் பதிவு செய்ததோடு, தனக்கான தகுதி இலச்சினை, கீதம் போன்றவற்றையும் உருவாக்கியுள்ளது.

தேடல் கலை இலக்கிய அமைப்பானது ஓராண்டு நிறைவினை இலக்கியப் பெருவிழாவாகக் கொண்டாடுவதற்கு இலக்கியப் போட்டி களை நடத்தி வெற்றியாளர்களை தெரிவு செய்து 'கவிமாமணி, கவிநதி, தேடல் கவி" என பன்னிரண்டு வெற்றியாளர்களுக்கு விருதுகளை வழங்கி, மதிப்பளித்து கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இனிவரும் காலங்களிலும் சேவையை மேலோங்கச் செய்து, தமிழிலே முன்னகர்ந்து, வளம்பெற்று இலக்கிய வரலாற்றில் முன்னிற்கும் இலக்கிய அமைப்பாகத் திகழும் என்பது திண்ணம்.

'தமிழிருக்கும் இடத்தில் நானிருப்பேன்"

நான் உறங்கும் இடத்திலும் தமிழ் வளர்ப்பேன்"

**கவிமாமணி: யோகராசா – கமல்ராஜ்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் எண்ணம்

தேடல் கலை இலக்கிய அமைப்பின் ஓராண்டு நிறைவினை வெளிக்காட்டும் வகையில் நூலுருவாக்கம் பெறுகின்ற "தேடல் விழுதுகள்" ஊடாக இலக்கிய உள்ளங்களைச் சந்திப்பதில் மட்டற்ற மகிழ்வடைகிறேன்.

எமது கலாசாரப் பாரம்பரியங்கள் தொடர்பான செய்திகளை வருங்காலச் சந்ததியினருக்கு வழங்கும் நோக்கினை மையமாகக் கொண்டு, இந்த முயற்சியில் கால் பதிக்க வேண்டியது காலத்தின் கட்டாயத் தேவையெனக் கருதுகிறேன்.

இன்று பிரசவமாகும் கலை வடிவங்களின் பேசுபொருள் பெரும் பாலும் கற்பனைகளாக அமைவதில்லை. மாறாக வாழ்வியல் தரிசனங்கள், அவர்கள் ஏற்ற வலிகள், அனுபவங்கள் தாம் இன்றைய புதுப் புனைவுகளுக்கு அடித்தளமாக அமைகின்றன.

"நாடு என்பது வெறும்மண்அல்ல கலாசாரம் தான் ஒரு நாட்டின் முகவரி, உயிர், அடையாளம். அதை இழந்துவிட்டு வெறும் மண்ணை வைத்துக் கொண்டிருப்பதால் என்ன பயன்?" என்கிறார் கவிக்கோ அப்துல் றகுமான்"

இந்த வகையில் "தேடல்" கலை அமைப்பின் ஓராண்டு நிறைவை யொட்டி வெளிவரும் நூலான தேடல் விழுதுகள் இதைத்தான் தேடி நிற்கின்றது. இந்தப் பெரும் முயற்சி நாளைய சந்ததியினருக்கு கயமை கலவாத ஆவணமாகத் திகழும் என்பதில் சிறிதும் ஐயமில்லை. தேடல் கலை இலக்கிய அமைப்பின் பணி தொடர வாழ்த்துவதோடு, உறுப்பினர்கள் அனைவரதும் அப் பழுக்கில்லாத உள்ளத் தூய்மையினையும் பாராட்டுகிறேன்.

**தேடல் விழுதுகளுக்காக**
**கவிமணி அ. கௌரிதாசன்**
**வள்ளுவர் வீதி**
**ஆலங்கேணி**
**கிண்ணியா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேனா பதிப்பகத்தின் வாழ்த்துச் செய்தி

தேடல் கலை இலக்கிய அமைப்பு தனது ஓராண்டின் வெற்றிப் பயணத்தை வெகு விமர்சியாக கொண்டாடும் திட்டத்தில் பல்வேறு நிகழ்வுகளையும் கடந்து வந்த போட்டிகளின் வெற்றியாளர்களின் கவிதை சிறுகதையென தொகுக்கப்பட்டு நூலாக்கும் இந்த உத்வேக செயற்பாடு உண்மையில் மகிழ்ச்சியளிக்கிறது.

பல்வேறு பட்ட முகநூல் இலக்கிய செயற்பாட்டு அமைப்புக்கள் இவ்வாறான முயற்சிகளில் ஈடுபட்டாலும் சில அமைப்புக்களாலே சிறப்பு பெற முடியும் அவ்வாறான சிறப்பு மிக்க இலக்கிய செயற்பாட்டு அமைப்பே இந்த தேடல் கலை இலக்கிய அமைப்பு என்று சொல்லி வைப்பதில் ஐயமில்லை.

இவர்களின் குறுகிய கால செயற்பாடு உண்மையில் பாராட்டுக் குரியது. இதில் தேடலின் குழுமத்தினரின் அயராத சுயநலமற்ற பங்களிப்பே பாராட்டுக்குரியது. தற்போது இந்த தேடல் விழுது தொகுப்பை எமது பேனா பதிப்பகத்தின் வடிவமைப்பில் அச்சிட்டு கொடுப்பதில் விருப்பம் கொண்ட மோகன கௌரிக்கும் எமது சிறப்புக்களை கண்டு எங்களை நம்பி வந்த தேடல் கலை இலக்கிய அமைப்பு குழுமத்தினருக்கும் எமது பேனா பதிப்பகத்தின் பாராட்டுக்களும் நன்றியும்...

அன்புடன்

Pena Publication

ஜே. பிரோஸ்கான்
பணிப்பாளர்
பேனா பதிப்பகம்
கிண்ணியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேடலுக்கு ஓர் ஆண்டு

ஓய்வறியா ஓர் சொல்லை
ஒழுக்கத்தின் மறு பிறப்பை
மங்கி நிற்கும் மனச்சோர்வை
மாணபு கொள்ள வந்த தேடல்

ஏங்கி நிற்கும் நம் தமிழை
எழில் கொஞ்சும் மொழியவளை
எடுத்துயர்த்தி விண்ணோச்ச
எழுந்து மண் வந்த தேடல்

ஆங்காங்கே மொழிக் கலப்பை
ஆயிரம் பழி பிழைப்பை
யார் வந்து தடை போட்டும்
தடையுடைத்து உயர்ந்த தேடல்

விடையில்லா கேள்விகளை
முகமறியா மிரட்டல்களை
தகுந்த வழி பதில் சொல்லித்
தகமை தனை கொண்ட தேடல்

சந்தித்த வேதனைகள்
சாதனைகள் ஆகியது
நிந்தித்த வார்த்தை எல்லாம்
நீறெனவே வேகியது

இனி உந்தன் ஏணியது
ஒரு போதும் வீழாது
ஏறியது படிகள் அல்ல
எவரேஸ்டின் மலை முகடே

கவிப்புயல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேடல் கலைச் சங்கமத்தின் நிருவாகக் குழு

- கௌரிதாசன் மோகன கௌரி
- யோகராசா கமல்ராஜ்
- தமிழ் மகன் (முகமது ஷா)
- மயிலையூர் மோகன் (சந்திர மோகன்)
- கனக சுப்புராஜ்
- கிருபாகரன் சரன்ராஜ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேடல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேடல்...

தேடல் என்பது
எல்லா
உயிர்களுக்கும்

மானுட
தேடலோ
வியப்பானதும்
விந்தையானதும்..

பிறப்பு முதல்
இறப்பு வரை
மானுடத் தேடல்கள்
என்றும் தீர்வதில்லை..!

மழலையாய்த்
தவழும்போது
மாசில்லா
அன்பின் தேடல்..!

பள்ளி செல்லும்
காலங்களில்
படித்திடவே
கல்வித் தேடல்..!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாலிபம்
வந்தபின்னே
வாட்டுகின்ற
வேலைத் தேடல்..!

கன்னியரைக்
காணும்போதில்
காளையர்க்கு
காதலின் தேடல்..!

ஏழையாகப்
பிறந்தால்
என்றுமே
பணத்தின் தேடல்..!

திருமணம்
முடிந்தபின்னே
தீராத மழலை
தேடல்..!

ஆன்மீகத்
தேடலொன்று
ஆத்மார்த்த தேடலது..!

தேடலது
தீர்வதில்லை
பூமியிலே
வாழும்வரை!.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விமுகா
முகவரி: 19/டீ, மேட்டுகாலனி
கோ. பவழங்குடி, விருத்தாசலம் வட்டம், கடலூர் மாவட்டம்
தமிழ்நாடு, இந்தியா
607104
கைபேசி: 9751804545

## எமது தேடல்

கனவேந்திய கண்களோடு
நினைவேந்திய நெஞ்சினோடு
திணவேந்திய தோள்களோடு
தினந்தோறும் நடக்கின்றேன்

ஒளியேறிய விழிகளுடனும்
உரமேறிய உள்ளத்துடனும்
உறங்காத இரவுகளோடு
உரையாடிக் கிடக்கின்றேன்

அழிந்திடும் உலகிதிலே
அழியாமல் நிலைத்திருக்க
எனக்கான அடையாளத்தை
எழுதிக் கொண்டிருக்கின்றேன்

நானே கல்
புத்தகங்களே உளி
சிற்பமாக என்னை
செதுக்கிக் கொண்டிருக்கின்றேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வறுமைக்குக் கனவினை
விற்றவர்கள் பட்டியலுள்
வந்துவிடக் கூடாதென
உந்திக் கொண்டிருக்கின்றேன்

காக்கைக்குக் கண்மைப்போல
கடன்காரன் பெற்றெடுத்த
கடைக்கோடி மகனுக்கும்
கனவுகள் அவசியமற்றதுவோ

நடைமேடைப் பூக்களெல்லம்
நறுமணம் வீசுவது
நந்தவன வண்டுகளுக்கு
நாற்றத்தைப் போன்றதுவோ

நானெழுதும் பாட்டினை
நாடுலவும் காற்றின்
புலன்களில் எல்லாம்
புகட்டிடத் துடிக்கிறேன்

உயிரிழந்த செவிகளும்
உயிருக்காக துடிக்கையில்
என்பாட்டு வரியூற்றி
வாழவைக்க நினைக்கிறேன்

புத்தகத்திற்கு வானமும்
வாழ்க்கையும் ஒத்திகைக்கு
குளியல் அறையும்
குளத்தங் கரையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினந்தோறும் திரைக்குப்பின்
அரங்கேறும் பாடல்களுக்கு
கவிஞனும் நானே!
கைத்தட்டல்களும் நானே!

அவ்வப்போது மலர்தூவி
மரியாதை செலுத்துகிறது
என்கண்ணீரால் துளிர்ந்திட்ட
தலையணைப் பூக்கள்

கவியழகி தமிழ்தாயின்
கடைக்குட்டி மகனிவன்
கவியெனும் நடைபயின்றே
நகர்கிறது நாட்கள்

ஒருநாளில் இவ்வுலகம்
என்கவியால் தலையசையும்
அத்திருநாளைத் தேடியே!
தினமும் ஓர் பயணம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேத்தாகுடி பூங்குன்றன்**
தேத்தாகுடி வடக்கு
வேதாரணி யம் வட்டம்
நாகப்பட்டி ம் மாவட்டம்
614809
அலைபேசி: 9443077625

## எமது தேடல்

கருவறையில் இருந்து
கல்லறை வரை
தேடல்கள் வாழ்வில்
நிறைந்தே இருக்கிறது
எமது தேடலும்
மனதில் ஏராளமாய்
எடுத்து இயம்புகிறேன்
தேடலில் சிறுதுளியை

உயர்வு தாழ்வு
நீங்கிடல் வேண்டும்
அனைவரும் சமமாய்
ஆகிடல் வேண்டும்
பிறப்பில் குறைகள்
இல்லாது வேண்டும்
இறப்பில் யாவரும்
போற்ற வேண்டும்
இறக்கும் வரைக்கும்
இன்பமே வேண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதவிடும் மனமும்
உலகோர்க்கு வேண்டும்
பஞ்சம் பட்டினி
பறந்திட வேண்டும்
பெண்களை யாவரும்
போற்றிட வேண்டும்
அனாதை இல்லங்கள்
அகன்றிட வேண்டும்
முதியோர் இல்லங்கள்
மறைந்திடல் வேண்டும்

தண்ணீர் இங்கே
தாராளமாய் வேண்டும்
இயற்கை அன்னையை
காத்திடல் வேண்டும்
மழையும் சரியாக
பெய்திடல் வேண்டும்
மண்ணுயிர் எல்லாம்
மகிழ்ந்திடல் வேண்டும்

அகதிகள் இல்லாத
அவனி வேண்டும்
தமிழர் தலைநிமிர்ந்திட
வாழ்தல் வேண்டும்
வாழ்வில் வசந்தம்
என்றும் வீசிட
எமது தேடல்
முடியாது தொடரும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிச்சாரல் சாரா
புத்தளம்

## எமது தேடல்

ஒற்றையடிப் பாதை
ஒழுகும் கூரை
பற்றும் வயிறு
மீளா எண்ணமாய்

அகதியில் அநாதையாகி
கதியென்று கிடக்கையில்
விதியது விரட்டுகிறதே
குன்றிலும் தளிராக

தூவும் பிணம்
தூவா பணம்
ஓடும் நதி
ஓடாத தலைவிதி
சுடும் தேநீர்
சுடாத கண்ணீர்
யாவுமே எம்பாடு

வாக்குக்கு வாசலடி
வாய் திறந்தால்
அந்நியனாம்!
அநியாயம்! அதர்மம்!
சிறகு விரித்து
விறகு எரிகிறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துளிர் விடுகையில்
கிள்ளி அள்ளி
மலிந்து மண்ணுக்குள்
மடிகிறதே எம்மினம்

திரையகற்றி தாரையாக
அணையகற்றி அருவியாக
விதையிட்டு விருட்சமாக
விடியலற்ற வாழ்வுக்கு
விழிகள் ஒளிபெற
தருவீரோ?
எம்
உரிமையை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எமது தேடல்

காற்று மழை சாரலுடன்
கை கோர்த்திட வேண்டும்
சேற்றில் கால் பதித்து
சோற்றுக்கு பஞ்சமில்லா
நாட்டினை ஏற்றம் செய்திடல் வேண்டும்!

தோற்றப் பிழையுடன்
தொடரும் கவலைகளை
தேற்றமாய் நனவாக்கி என்
பயணத்தைத் தொடர வேண்டும்!

நூற்றாண்டு கடந்து
புதுமைகள் மலர்ந்து
மாற்றங்களைத் தந்திடும்
நற்படைப்புக்கள் வேண்டும்!

கனவுகளுக்கு ஒப்பனை சேர்த்து
காலத்தை வென்று
சாதனை புரிந்து வாழ்ந்திட வேண்டும்
தமிழினத்தின் விடுதலைக்காய் முயன்று உழைத்து
உண்மை உறுதி காத்திட வேண்டும்!

தீமைகள் காண்கையில்
தீண்டியே கண்களால்
தீயாகிப் பொசுக்கிட வேண்டும்
மந்தையாய் உழலும் மானிடப் பதர்களுக்கு
மனுதர்மத்தை புகட்டிட வேண்டும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வல்லமை பூண்டு புல்லரை வதைத்து
வல்லூறாய் வழிகள் வகுத்திட வேண்டும்
விந்தை பல புரிந்து நாட்டில் தமிழர் விடியலுக்காய்
வீரியமாய் விரைந்து செயல்பட வேண்டும்!

தமிழினால் பிழைக்கும் தற்குறிப் பிழைகளை
தணல் போல தாக்கிட வேண்டும்
தாய் மொழி கொள்ளியில் பொசுங்கிடும் முன்னே
தவமாய் போர்க் கோலம் பூண்டு
காத்திட வேண்டும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என் தேடல் நீ

*கண்மணியே என் காதல்*
*நாயகியே உனக்கான என்மனது!*
*விழி நீரில் நனைகிறதே!*
*ரணமான இதயத்தின் வேதனையே!*
*என் உணர்வை நானுரைத்தேன்!*
*உன் மனதை அறிந்திடவே!*
*மொழி வழி நீயுரைக்க!*
*கனவிலும் நனவிலும் தேடுகிறேன்!*
*உணர்வாலும் உயிராலும் தேடுகிறேன்!*
*உன் காதலன் நானாகிட!*
*என் வாழ்க்கை நீயாகிட!*
*என் தேடல் தொடர்கிறதே!*
*என் கண்மணியே!*
*இப்படிக்கு*
*உன் காதல் நான்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறுக்கி நா. அருள்ராஜ்
கொடுக்குளாய்
ஆழியவளை
வடமராட்சி கிழக்கு
யாழ்ப்பாணம்

## என் தேடல் நீ

காற்றோடு கலந்து மூச்சாகிப் போனாயோ
கடலோடு கலந்து நுரையாகிப் போனாயோ
வானத்தில் மிதந்து நிலவாகிப் போனாயோ
இருளோடு கலந்து நட்சத்திரம் ஆனாயோ
கார் முகிலோடு கலந்து மழையெனப் பொழிந்தாயோ
உயிரோடு கலந்து உறவென ஆனாயோ
என் கற்பனையில் கரைந்து கவியென ஆனாயோ
எங்கு நீ சென்றாயோ
யாதொன்றும் புரியாது தேடுகிறேன் உன்னையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்துல் ரஹ்மான்
38 - இந்திரா நகர்
பட்டூர்,
மங்காடு,
சென்னை - 600 122
தமிழ் நாடு,
இந்தியா.

## உயிருக்குள் உருவானாய்

ஈருடலில் கண்ட சுகம்
வேறுயிராய் பிறப்பெடுத்து

தூய்மை மிகு உறவினிலே
தாய்மை யெனும் பெயரளித்து

உயிருக்குள் மெய்யாக
பயிரான பசுந்தளிரே

கண் விழித்துப் பார்க்கையிலே
கண்ட சுகம் கோடி யன்றோ...

என்னுதிரம் நானளித்து
உன் புகழை காத்திருப்பேன்

கண்ணுக்குள் கருமணியாய்
எந்நாளும் உனை சுமப்பேன்...!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புன்னகைவேந்தி
ஸமான் லாபிர்
இங்கிலாந்து

## உயிருக்குள் உருவானாய்

கண்ணே கலைமானே
துள்ளிவரும் பூஞ்சிட்டே
அள்ளியுன்னைக் கொஞ்சயிலே
எந்தனுள்ளம் துடிக்குதடி
கண்ணே கலையழகே
மெய்வடிவம் உனதுருவே
மழலைமொழிப் பேச்சினிலே
கன்னிவிட்டாய் என்மனதை...!

சித்திரமே சிரிப்பழகே
வாசமுள்ள மலர்த்தேனே
நித்தமுந்தன் வாயினிலே
பூக்களும்தான் உறங்கிடுதோ
கிள்ளைமொழி கொண்டெந்தன்
சிந்தையிலே பள்ளிகொண்டாய்
வாய்மொழி காட்டியெந்தன்
உயிர் மீது குடிகொண்டாய்...!

எத்தனையோ இன்பங்கள்
இருந்தாலும் இவ்வுலகில்
உன் மழலைமொழி தவிர்த்திங்கு
வேறு ஒன்று வென்றிடுமோ
வயிற்றினிலே கருவானாய்
என்னுயிருக்குள் உருவானாய்
வாழ்வுக்கே வரமானாய்...!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈச்சையூர்க் காளி
நா. காளி ராசா
244, லிங்கங்கள்
திருகோணமலை

## என்னுயிர் உன்னிடத்தே

*கட்டு உடல் மொட்டழகி*
*கரு வண்டு கண்ணழகி*
*சொட்டுதிர இதழ் அழகி*
*சுண்ணாம்பு நிறத்தழகி*

*கன்னக் குழியழகி*
*கார்கூந்தல் பேரழகி*
*உன்னுடலில் என்னுயிரு*
*உறைஞ்சிருக்குத் தெரியுமோடி*

*தென்னம்பூச் சிரிப்பழகி*
*தேன் மதுரப் பேச்சழகி*
*உன்னிதயப் பொறிமுறைக்கு*
*உயிர்க்காவல் நானேடி*

*சங்குக் கழுத்தழகில்*
*சரணாகதி என்னுயிரு உன்*
*தங்கக் கரமிரண்டில்*
*தவமிருக்கு என்னுயிரு*

*கொள்ளை அழகிரண்டில்*
*குடியிருக்கும் என்னுயிரை*
*குணந்தவறி நடந்து அதன்*
*கூட்டினை நீ கலைத்திடாதே*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழை மடல் போல
வார்த்த இரு கால் அழகில்
வாடிக் கிடக்குதடி
வார்த்தையின்றி என்னுயிரு

பால் நகத்தில் மைப்பூச்சாய்
படிஞ்சி கிடக்குதடி உனக்கு
பாதபூசை செய்வதற்கு
பாழ்பட்ட என்னுயிரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முனைவர் முகிலை பாரி
முகிலன்குடியிருப்பு
அகஸ்தீஸ்வரம் - 629701
குமரி மாவட்டம்

## என்னுயிர் உன்னிடத்தே

கன்னியே உன்னெழில் கண்டநாள் முதலதாய்
என்னுயிர் உன்னிடத்தே என்னதான் மாயமோ?
கன்னலும் தோற்றிடும் கனிவுடன் பேசியே
மன்னவன் என்னையும் மடியினில் சாய்த்ததேன்?

புன்னைபோல் பூத்திடும் புன்னகைச் சோலையே
நின்னடி சரண்புகும் நிலைமைதான் ஆனதேன்?
தேன்துளி தெளித்துநீ தேகத்துள் நுழைந்தே
வான்துளி போலஎன் வாழ்க்கையில் பொழிகிறாய்

மான்விழி மாதுஉன் மாங்கனி கன்னத்தில்
பொன்னொளி போர்த்திய பௌர்ணமி காய்க்குதே
சின்னஇதழ்ச் சிமிழிலே சிலதுளி அமுதமாய்
தின்னநீ கொடுப்பதால் திகட்டவும் இல்லையே

மன்மதப் போரிலே மஞ்சமாய் ஆனவள்
தன்னிரு தனங்களால் தணல்தனை மூட்டினாள்
சின்னவோர் சிற்றிடை சிதைவுறா முன்னமே
மின்னலே மீட்டுவேன் மிகுந்தெழும் காதலால் !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரமானந்தம் தியாகராஜா
காயான்மடு
கன்னன்குடா
மட்டக்களப்பு
இலங்கை

## உனக்காகவே நான் வாழ்கிறேன்

நடைப்பிணமாய் நான் அலைந்து
இடையில் வரும் இன்னலறிந்து
விடைதேடி வந்தேன் நான்...
குடையால் மறைத்துச் சென்றாய் நீ...!

உள்ளத்தின் குமுறல் ஓசை
தள்ளிக் கொண்டு வெளி வந்ததால்
பள்ளி கொள்ள முடியாமல்
எள்ளி நகைத்தாய் நீ அங்கே...!

வாழ்த்து அட்டைகள் வாங்காமல்
வரைந்த அட்டைகளோ ஏராளம்
ஆழ்மனதில் உனை வைத்தேன்
ஆவாரம்பூ மேனி உன்னை...!

தாலாட்டு மெட்டு இசைத்து
தள்ளாடும் மழலை ஒன்று
கோலாட்டம் ஆடி நின்றான் அங்கே...
கோகுலத்தில் கண்ணன் அவன்...!

ஊடலுக்காய் வந்த சொந்தம்
தேடலிலே கிடைத்ததென்று
ஊரறிய வந்து நின்றாய் நீ...
உனக்காக வாழ்கிறேன் நான்...!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவலர் தண்முகநம்பி
தரகம்பட்டி - 621311
கடவூர் வட்டம், கரூர் மாவட்டம், தமிழ்நாடு

## உனக்காகவே நான் வாழ்கிறேன்!

திருவிழாக் கூட்டந் தன்னில்
தேவதையே உனைநான் கண்டேன்!
அருகினிலே வந்தாய்! ஏதோ
ஆகாய மின்னல் போல
இருவிழியால் தாக்கி என்னை
இதயத்தைக் கவர்ந்து சென்றாய்!
ஒருவழியாய் மீண்டும் நானும்
உயிர்பெற்று விழித்துப் பார்த்தேன்!

தெருவழியே தோழி யோடு
தேர்போல அசைந்து சென்றாய்!
நறுமலரால் அலங்க ரித்து
நகர்ந்துவரும் தெய்வம் போல
இருள்தன்னில் ஒளியாய் வந்தே
என்மனத்தை பறித்துச் சென்றாய்!
மருள்வந்தே என்னைப் பற்ற
மயங்கித்தான் நின்றேன் நானும்!

பெருகிவரும் வெள்ளம் போல
பெருங்கூட்டம் வரவும் அங்கே
கருமுகிலின் கூட்டத் துள்ளே
கலைநிலவும் மறைந்த தைப்போல்,
சிறுநிலவும் ஒளிந்து கொண்டாள்
சிறகடித்துப் பறந்து சென்றாள்!
வருவாய்நீ என்றே இங்கு
வாழ்கின்றேன் உனக்காய் நானும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ச.ப. சண்முகம்
எழுவாம்பாடி

## உனக்காகவே நான் வாழ்கிறேன்

முத்தமிழ்ச் சுடரே முல்லைக் கொடியே
முத்தத்தி லான முழுமதி நிலவே
சத்தம் இன்றியே சாதனை படைத்திட்ட
இரத்தத்தில் குடிபுகுந்த ராக்கால ஓவியமே..

கள்ளிக் காட்டு கள்ளிப் பழமே
அள்ளிப் பருகிட ஆசை தீர்ந்ததே
சொல்லுமுன் சொல்லில் சொர்க்கத்தைக் கண்டேன்
சொப்பனத்தி லூறியச் சொக்கத் தங்கமே..

மின்னலென வீசிடும் மின்சார ஒளியாய்
என்னுள்ளே தான் என்றும் தேக்கியுள்ளேன்
கண்ணைத் திறந்து காண்பிக்கின்றேன் பார்..
ராதையாய் அதில் ராணியைப்போல நீ!..

அன்பெனும் சொல்லில் அழகாய் கோர்த்து
பண்பெனும் பூமாலையை பாசத்தோடு சூடி
வான்வெளிக் கூட்டமெலாம் வந்திங்கு வாழ்த்திட
பெண்ணே உனக்காகவே நான் வாழ்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கஞ்சனூர்... தே. பாஷியம்....
கஞ்சனூர் ருஅஞ்சல்
விக்கிரவண்டி தாலுக்கா
விழுப்புரம் மாவட்டம்

## வாழ்வு தேடும் நெஞ்சங்கள்

கருவில் உருவெடுத்த இருளான வாழ்வு
கையிற்குள் வராத நிலவைப்போல தொலைவு
அங்கத்திற்கு உணவுதேடும்
அன்றாடக் கனவு
அந்தரத்தில் நடக்கிறேன் இறங்கினால் தான் உணவு

பெற்றவர்களுக்கும் படைத்தவனுக்கும்
கண்ணில்லை மெழுகாக நானே
இருக்கவும் படுக்கவும் இடமில்லை
தெருவோரமாக வாழ்வு
தேடி அலைகிறேன்
என்னைப் படைத்த இறைவனைப்
படர்ந்த பூமியில் பாதுகாப்பும் இல்லை
இரவிலும் பகல்கனவு காண்கிறேன் உறக்கமின்றி

பிச்சை எடுத்துப் படித்து விட்டேன்
பிச்சைப்பாத்திரம் அழுகிறது வேலைக்காக
எச்சக்காசு கேட்கும் லஞ்சமாய் அதிகாரிகளிடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வுக்காக வதைபடுகிறேன்
உணவுக்காக மிதிப்படுகிறேன்
கருணையில்லா மக்கள் கண்டபடி பேசுவதால்
கண்களிலும் கண்ணீரில்லை
கடந்து செல்கிறேன்
ஐந்தறிவுப் பறவைகளை போல

தேடலும் அதிகமாச்சு வயதும் வளர்ந்துபோச்சு
வருத்தப்படாத வானமும்
வளர்ந்தே உயர்ந்து போச்சு
வாழ்வை தேடும் நெஞ்சமாய்
வான் நோக்கிச் செல்கிறேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நஸீரா எஸ் ஆப்தீன்
ஓட்டமாவடி

## வாழ்வு தேடும் நெஞ்சங்கள்

ஊனுக்கும் வழியில்லை
உறங்கவோர் இடமில்லை
வீணுக்கேன் பிறந்தோமென
வீதிகளில் அலைந்து நிதம்
வாழ்வு தேடும் நெஞ்சங்கள்.

பஞ்சத்தில் பரிதவித்து
நெஞ்சத்தில் தவிப்புடனே
ஏழையின் குடிசைகளில்
ஏங்கியழும் சிறுவர்களின்
வாட்டத்தைப் போக்கிடவே
காடு மலை கழனிகளில் - நிதம்
கூலி தேடும் நெஞ்சங்கள்.

வீடுகளில் உறவுகளின்
வறுமைதனைப் போக்க எண்ணி
மனைவி மக்கள் தனை இழந்து
நாடு விட்டு நாடு சென்று
வாழ்வுதனைத் தேடுகின்ற
வாட்டமுற்ற நெஞ்சங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லறத்தை இன்பமுடன்
ஏற்றிடவே மறந்திங்கு
நல்ல பல செல்வங்களை
நட்டாற்றில் நழுவ விட்டு
குடியும் கூத்தியரும்
கொண்டதே வாழ்க்கையெனத்
தேடித் தினம் அலைகின்ற
திக்கற்ற நெஞ்சங்கள்.

தேடிய செல்வங்களை
மூடிப் பதுக்கி வைத்து
கோடிகளாய்க் குவிந்திடினும்
மாடி மனை அமைந்திடினும்
மனதினிலே அமைதியின்றி
ஓடியோடி உழைத்திங்கு
வாழ்வு தேடும் நெஞ்சங்கள்.

விண்ணதிரும் குண்டுகள்
துப்பாக்கி வேட்டுக்கள் முன்
மண்டியிட்டு அழுகின்ற
மானிடரின் மரணஓலம்
பதுங்கு குழி பற்றைக்காடு
பள்ளங்களில் படுத்துறங்கும்
பச்சிளங் குழந்தைகள்தம்
வாழ்வுதனைத் தேடியிங்கு
பரிதவிக்கும் நெஞ்சங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்வு தேடும் நெஞ்சங்கள்

இந்திரியம் சினங்கொண்டு கருவாகி உருவாகி
இகழ் பெறும் மானுடமாய்ப் பூத்ததோ?!

மனிதச் சாதிகளிற்குச் சமத்துவமாய்
மனிதவுடல் சரிபாதியாய் வடித்தவையாகியது!

சமூகச் சாக்கடையில் ஊறிய அட்டைப்பூச்சிகள்
சபிக்கப்பட்ட இனமென ஒதுக்கி விடவே!

சமநிலைப் பேணும் இரவிலும் கண்ணீர் வடித்துச்!
சதை தின்னும் பிண்டங்களுக்கு இரையாகியது!

வீதியில் நடமாடும் அசிங்கச் சின்னமென
வீணர்கள் ஒதுக்கியதால் வாயில்லாப் பூச்சிகளாகியது!

ஆண்பூவும் பெண்பூவும் ஒருசெடியில் பூப்பதில்லையா?
அர்த்தநாரீஸ்வரராகக் கடவுள் வந்ததை
நாம் வணங்கவில்லையா?

வள்ளுவச்சொல்லுக்கும் முப்பால் உண்டென்பதை
நாம் ஒருபோதும் மறுப்பதில்லையே!
காலமும் முக்காலம் கொண்டுள்ளென்பதை
நாம் மறுக்கத்தான் முடியுமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்பாலும் பெண்பாலுமிணைந்து சமத்துவப்பாலாகத்
திருநங்கையர் கலந்திடுவதை இச்சமுதாயம்
தடுத்து மறிப்பதும் ஏனோ?
அவர்களை வஞ்சித்து வாழ்வின் மூலையில்
நடைப்பிணமென வாழ்வைத்தேடும்
நெஞ்சங்களாக்குவதும் ஏனோ?
மானுடத்தையும் தற்கொலை செய்வதேனோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புஸ்பராசா பிரவீனா
வன்னியூர் மகள்
வெள்ளாங்குளம் மன்னார்

## வாழ்வு தேடும் நெஞ்சங்கள்

கட்டடங்கா ஆற்றினிலே
தத்தளிக்கும் சிற்றெறும்பாய்
நாதியாய் நடுத்தெருவில்
நடக்கின்ற பயணமிது

வாழ்வதனைத் தேடியே
வழிகாணா நெஞ்சங்கள்
ஆட்டிய ஊஞ்சலைப்போல்
அங்குமிங்கும் அலைகின்றனர்

தெருவினிலே ஒருவன்
தனைமறந்து கிடக்கின்றான்
பெற்றவரும் பிள்ளைகளும்
கட்டிய துணையுமங்கே
குண்டுமழைதனிலே
குருதியை இறைத்தமையால்

பட்டவிழ்த்து பொட்டழித்து
வெண்மையிலும் இருண்டுபோய்
விழிகளினுள் அவனுருவை
தினம் தினம் பூஜித்து
திக்கற்று திசையற்று
திரிகின்றாள் இன்னொருத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாய்முகத்தைக் காணாத
பால்வடியும் பிஞ்சொன்று
சேலைப் பொம்மையதை
கட்டியணைக்கின்றாள்
தாய்ப்பாசம் தேடியங்கே

பூவொன்று பூக்கையிலும்
கண்ணீரே வடிக்கின்றாள்
கருவறையை தொட்டங்கே
கடவுளிடம் இரஞ்சுகிறாள்

இரும்பறைக்குள் இருப்பவனாய்
சுயமிழந்து உளறுகின்றான்
தாய்மண்ணை பிரிந்திட்ட
புலம்பெயர் கைதியவன்

காதலில் தோற்றவனும்
கல்வியை இழந்தவனும்
காமுகரின் கைகளுக்குள்
கசங்கிய மொட்டுகளும்

அவயங்கள் இழந்தங்கே
அந்தரப்படுவோரும்
முதிர்கன்னியாகியும்
கரைசேராதழுபவளும்

ஊரெல்லாம் தேடுகையில்
வழி தேடும் விழிகளிங்கே
மலிந்துபோய்க் கிடக்கிறது
மயானபூமியிலே
அமைதிகொள்ளாஆத்மாபோல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ப. அருண்

## வாழ்வு தேடும் நெஞ்சங்கள்

சாலைகளே வீடாகிச்
 சாக்கடைகள் வாழ்வாகி,
சோலைகளோ சாம்பலாகி
 சோகங்களோ சொந்தமாகிப்,
பாலையென வறண்டுப்போயி
 பாவங்களுக்கு ஆளாகி,
நிலையான வாழ்வைத்தேடும்
 நெஞ்சமிங்கு எத்தனை?.

பெற்றெடுத்த பிள்ளைகளோ
 பேணிடாது துரத்திடவே,
கற்றுவந்த கல்விக்குக்கூடக்
 கைக்கொடுத்து உதவிடாது,
நற்றுவைத்த நாற்றங்காலு
 நீரற்று வறண்டதுப்போல,
ஊற்றைத்தேடும் நாற்றாக
 வாழ்வைத்தேடும் நெஞ்சகளெத்தனை.

சாத்திரத்தின் பெயராலும்
 சங்கடத்தின் துயராலும்,
கத்தியோட கூர்மைபோல
 குத்துகின்ற வலியாலும்,
முத்திப்போன பெண்ணென்று
 முதிர்கன்னி பெயரிட்டு,
நித்தமும் வாழ்வைத்தேடும்
 நெஞ்சகளிங்கு எத்தனை?.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரவணைக்கக் கரமின்றி
அனாதை சொல்லேந்தி,
தெருக்களில் வாழ்வாகி
தரங்கெட்ட பிழைப்பாகி,
இரக்கும் நிலையாகி
இழிவான பிறப்பாகி,
உறவுக்காய் வாழ்வைத்தேடும்
நெஞ்சகளிங்கு எத்தனை?

மலடியெனும் பெயரிட்டு
மதிப்பில்லா மாதுவாகி,
கல்லடி பட்டமரமாய்
கடுஞ்சொற்கள் தாக்கி,
செல்லமேன்னு கொஞ்சிடத்தான்
பிள்ளையில்லா வாழ்வாகி,
பிள்ளைபேரு கேட்டிடும்
பேர்களிங்கே எத்தனை?.

தினம்தினம் நெஞ்சங்கள்
தேம்பிதேம்பி அழுகிறதே,
நிலையான வாழ்வையெண்ணி
நித்திரையும் தொலைக்கிறதே,
கடவுளே கருணையுண்டோ
காத்திடக் கரம்கொடு,
தேடுகின்ற நெஞ்சங்களுக்கு
நிலையான வாழ்வைக்கொடு!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

க. வருண் கார்த்திக்
கரூர் / தமிழ்நாடு
இந்தியா

## வாழ்வு தேடும் நெஞ்சங்கள்

ஆடி அடங்கும் அன்னை
பூமியிலே
ஆசைகள் தேடும் மனித
உலகிலே
ஆறடி நிலமும் சொந்தம்
இல்லை
அநாதை எனக்கு யாரும்
இல்லை

இச்சை தீர்த்தவளின் எச்சத்தில் பிறந்தேன்
பச்சை மேனியில் மிச்சமாய் வளர்ந்தேன்
பெற்றவள் யாரோ..?
பெற்றவளுக்கு துணையாய் நின்றவன் யாரோ?
நான் அறியேன்

பால் வாடை பிடித்தது
இல்லை
பள்ளி தேடிப் படித்தது
இல்லை
அன்பு எதுவென உணர்ந்தது
இல்லை
உறவு யாரென அறிந்தது
இல்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குப்பை மேடே வசிக்கும்
வீடாகா
எச்சில் சோறு உண்ணும்
உணவாக
கந்தல் துணி உடுத்தும்
உடையாக
எதிர்கால கனவு என்னுள்
நினைவாக

கலை இழந்த முகத்தோடு
தேடுகிறேன்
கண்களில் கண்ணீர் சிந்த பாடுகிறேன்
காலம் மாறுமென கால்களில் ஓடுகிறேன்
வாழ்வைத் தேடும் நெஞ்சமாய் வாடுகிறேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிரஞ்சலா நிரா
நெதர்லாந்து

## வாழ்வு தேடும் நெஞ்சங்கள்

மேடு பள்ளமான வாழ்க்கைப்பாதை
கடந்து செல்லவோ இன்னல்கள் ஏராளம்
தேடிய இன்பமும் தொலைதூரமாய் விலக
பாடுபடும் நெஞ்சில் மாறாத வலிகள்

வாழ்க்கையும் போராட்டமாய் தினம் களமிறங்க
வரவுசெலவாய் மாறும் அன்றாடத் தேவைகள்
எட்டிப்பிடிக்கத் தட்டிவிடும் பேராசைக் கனவுகள்
கண்ணைக்கட்டிக் காட்டில் விட்ட நிலை

இலவு காத்த கிளியாய்க் காத்திருந்த காலங்கள்
பஞ்சாய்ப் பறந்தும் நெஞ்சைத் தாக்கியது
வஞ்சம் செய்யும் உலகை வெறுத்து
மௌனமாய் அழுது கரையும் காலம்

உறவும் பிரிவும் பருவகாலமாய் மாற
உயிராய் இணைந்தது நடுவழியில் பிரிவாக
சிதறிய நெஞ்சில் வடுக்களாய்ப் பதிய
கதறிய உள்ளமதை அணைத்தது தனிமை

இயந்திரமாய் சுழன்று உழைப்பில் உருகி
கையில் நின்றதும் காணாமல் போனதும்
நிரந்தரமில்லா வாழ்வில் உருளும் சக்கரம்
தேடல்கள் முடிவின்றி வேகமாய் நீளுதே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகீரதன் கங்காஜினி
(ந.ப. கங்கா)
ஜெயந்திநகர், கிளிநொச்சி

## ஊஞ்சல் வாழ்க்கை

ஏற்றமும் தாழ்வுமாய்ப் பொருளாதார நிலை
ஏய்த்துப் போகும் உறவுகளின் பாசம்
குலைந்து விட்ட கூட்டுக் குடும்பம்
களைந்து போய்விட்ட பாரம்பரியம்

சாதியும் மதமும் மாறிமாறிச் சண்டையிலே
வாளெடுத்து வீழ்த்துகிறது வீரத்தின் மனிதத்தை
வறுமையும் பிணியும் ஏழையின் வீட்டிலே
வளமும் வாழ்வும் முதலாளி மாடத்திலே

சுழன்று அடிக்கும் இயற்கை அனர்த்தங்கள்
சுக்குநூறாகும் குடியிருப்பின் நிலையியல்
முன்னேறத் துடிக்கும் பெரு முயற்சியாளன்
முடங்கிப் போகின்றான் முட்களின் பாதையிலே

சூதும் வாதும் சூழ்ந்திடும் முன்னே
வாழ்வும் பேறும் அடைந்திட எண்ணி
அங்கும் இங்குமாய் அலைகடல் தாண்டியும்
ஊஞ்சல் ஆடும் வாழ்வின் மாயம்

நீதியும் நேர்மையும் நிழல்கூட இன்றி
மலிகின்ற போலிக்குள் மறைகின்ற காலம்
அன்பை விற்று அடிமையை விலைவேண்டி
அற்ப வாழ்விற்குள் அமிழ்ந்து போகின்றது

நிலையின்றி நிரந்தரமின்றி அலைபாயும் மானிடர்
ஊஞ்சல் வாழ்வு தொடர்ந்தும் ஆடியபடியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அ. கமலதாஸ் (மட்டுநகர் கமல்தாஸ்)
முதலைக்குடா, கொக்கட்டிச்சோலை
மட்டக்களப்பு

## ஊஞ்சல் வாழ்க்கை

அந்திரத்தில் தொங்கித் தினம்
சுதந்திரத்தை இழக்கின்றோம்
தந்திரவாதிகளிடமிருந்து ஏமார்ந்து
மந்திரவாதிகளைத் தேடுகின்றோம்
இயந்திரத்தை நம்பி
இயற்கையைத் தொலைத்தோம்
இந்திரியத்தில் அகப்பட்டு
இனிமையை இடைவிட்டோம்
ஆன்மீகத்தை உதறி விட்டு
ஆசையில் மூழ்கினோம்
ஆதிக்கவாதிகளிடம் சோரம்போய்
ஆதரவின்றிப் போனோம்

எஞ்ஞான்றும் நிமிர்ந்து நட
பஞ்சமென்று பதறாதே
கஞ்சத்தனம் கொண்டு காரியம் ஆற்றாதே
சஞ்சலம் சூழ்ந்தாலும் சற்றும் தளராதே
வஞ்சகம் கொண்டு வாழ்வதைத் தவிர்
தஞ்சமென்று வருவோருக்கு தானம் கொடு
நெஞ்சகமெல்லாம் அன்பும்,
அறனும் ஆளட்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊஞ்சல் ஆடுவதால் வாழ்வு வளமாகும்
ஊஞ்சலாய் வாழ்வானால் மனை களமாகும்
கிடைக்கும் காலத்தை இனிமையாய் கழித்திடு
கொடைகொடுத்தேனும் பாவவினையினை அறுத்திடு
தலைக்கனம் ஏந்தி தாண்டவம் ஆடாதே
தலைமுறை வாழ்வை தட்டிக்கழிக்காதே
தப்பென அறிந்தும் தவறு புரியாதே
தன்னுரிமையை தவறிட எண்ணாதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிஸ்னி

## அந்தி சாயும் வேளை

ஆகாயம் நீந்தி வந்த
ஆதவனும் மறஞ்சிருச்சி
ஆகாரம் தேடிப் போன
பட்சிகளும் வந்திருச்சி

ஆத்தோரம் தண்ணியள்ளும்
பொண்டுகளும் போயாச்சி
ஆடு மேய்க்கும் இடையனும்
சாச்சிக்கிட்டு வந்தாச்சி

அந்தியில பூப்பதெல்லாம்
அழகாக விரிஞ்சாச்சி
அந்த நேரம் மடிவதெல்லாம்
தலை குனிந்து நின்றாச்சி

வயப்பக்கம் போனவக
சோலி முடிஞ்சி போயாச்சி
வயசுப்புள்ள கன்னம் போல
வானம் சிவந்தாச்சி
வானத்து மீனெல்லாம்
ஒன்னொன்னா கண் விழிச்சாச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆம்பல் கண்ணே
அத்தப் பொண்ணே
அத்தான் உன்னை
வைததுக்காய்
அள்ளிக் கொண்டு
போனதென்ன

அந்தி சாயும்
வேளையிலும்
வந்தக்கோபம் குறையாமல்
இருப்பதென்ன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்மணிதாசன்
2/40/1 சுண்ணாம்புக்காரத் தெரு
பாப்பாக்கோவில் 611102

## அந்தி சாயும் வேளை!

அந்தி சாயும் வேளை - மனம்
ஆகுதடி சோலை
வந்து நீயும் போரே - நான்
வாசிக்கிறேனுன் பேரை!

பாடத்துப் பார்த்துப் போனாய் - காலம்
பறக்குதடி வீணாய்
சேடந்து ஒன்றிப் போனால் - கால
செலவு இல்லை வீணாய்!

கூடும் நேரம் பார்த்து கொஞ்சம் நீயும் சொல்லு - அது
கூடாதுன்னு சொன்னா கூடும் சோகம் புள்ளே
பாடும் நேரம் பாரு நீபாடினாலே என் பாடு
பந்திக்கு நீ சோறு நான் பாயாசந்தான் சேரு!

இரவு வரும் முன்னே இரங்கி வாடி கண்ணே
ஈச்சம் பாயி போட்டு இலவுக்கிளியானேன்
வரவப் பாத்துப் பாத்து வத்திப் போச்சு கண்ணு
வந்து நீயும் தட்டு வாசல் கதவ பெண்ணே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ர. ரகுராமன்
செண்டங்காடு மேலத்தெரு, பட்டுக்கோட்டை
தஞ்சாவூர், தமிழ்நாடு
இந்தியா
614901

## அந்தி சாயும் வேளை

அந்தி சாயும் வேளையிலே
அத்த மக போகயிலே
குத்த வச்சுக் காத்திருக்கேன்
கொஞ்சம் என்னை பாத்துப்போயேன் ...!

வீட்டோரம் நான் இருக்கேன்
காட்டோரம் நீயும் போர
காதல் மனச தந்துப்புட்டு
கண்டுக்காம போரது யென்ன ...!

செவ்வந்திப் பூக்கணக்கா
செவந்த வண்ணம் நீயிருக்க
அன்ன நடை போட்டுக்கிட்டு
எங்கேயோ நீயும் போர...!

காவிரி ஆத்து ஓரத்திலே
தன்னந் தனியா போரவளே
திரும்பிக் கொஞ்சம் பாடித்தாயென்ன
தவிப்போடு நானும் வாரேன் ...!

தை மாசம் பொறந்தாச்சு
தங்க தாலியும் செஞ்சாச்சு
பரிசம் போட்ட பின்னாலே
கல்யாணம் நாம செஞ்சிக்குவோம் ...!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அந்தி சாயும் வேளை

அந்தி சாயும் வேளையில
அத்தை மக போகயில
நெஞ்சுக்குள்ள ஏதோ ஒண்ணு
நெறஞ்சுதான் போகுதடி
மாமன் பொண்ணு மயிலே
நான் மனசுவச்ச கிளியே

மஞ்சப் பட்டு சேலையத்தான்
மயக்குறாளே கட்டிக் கிட்டு
மாமன் கிட்ட வந்து வந்து
மத்தாப்பாய்ச் சிரிக்கிறாளே
மங்கை உந்தன் வரவே
இந்த மாமனுக்கும் உறவே

வட்டமான மொகத்துமேல
வளைஞ்ச நிலாப் பொட்டு ஒண்ணு
ஒட்டிக்கிட்டு வந்திருக்கா
ஒய்யாரமாச் சின்னப் பொண்ணு
ஓடித்தான் வந்தேனே
ஒன்னப் பாத்து நின்னேனே

வெட்கத்துல என்னைப் பாத்து
செக்க நீ செவக்கையில
காந்தமாய் இழுக்குதடி
கன்னக்குழி ரெண்டும் என்னை
அந்தியில் பூத்த பூவே
என் அழகு ராணியும் நீயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தி நேரம் வந்துபுட்டா
சொந்தமுன்னு வந்து நிற்பா
ஆடிமாசம் முடிஞ்சவுடன்
தாலிக்கட்டப் போறேனடி
தங்க மணி ரதமே
இனி சொந்தக்காரி நீயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோதிகா. ரெ
(ஆகிஷா.S)
கோயில் வீதி
கொக்குவில் கிழக்கு
கொக்குவில்.
யாழ்ப்பாணம்

## களை பிடுங்கும் வயசுப் புள்ள

களை பிடுங்கும் வயசுப்புள்ள
காளை ஒண்ணு ஏங்குதிங்க
கைவளையல் சிணுங்கையில - அடி
கல்மனசு கரையுதுள்ள.

கம்மாங்கரை ஓரத்திலுல
களத்து மேட்டு வரப்பினுல
கழனி நெல்லு மணியபோல - நீ
கதைச்சு போன காலமெங்க.

கள்ளிச்செடி காட்டுப்பற்றை
கம்மஞ்சோறு ஊட்டிவிட்டு - அவ
கையக் கொஞ்சம் பிடிச்சுக்கிட்ட
கதையக் கூறி குத்துதிங்க.

கட்டவண்டி ஓட்டி போயி
கன்னியவள் ஓட நானும்
கலியாணம் பண்ணிக்கிட
காஞ்ச நெஞ்சு கதறுதிங்க - உன்
காதிலது கேக்குதில்ல

கிறுக்காட்டம் நானுமிங்க
கண்டுக்காம நீயுமெங்க
கஞ்சப் பய என்டு திட்டி
கண்ணு ரெண்டும் வேத்து போவ - நா
கஞ்சாப்புகை போதை போல
கலங்கித்தா போனன் புள்ள.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## களை பிடுங்கும் வயசுப் புள்ள

வெயிலோடு காற்றும் சேர
கதிரோடு மணியும் சாய
கண்ணே என் அத்தை புள்ள
களையோடு கருகிறியே.

வரம்போடு மாமன் நானும்
மலை போல நிக்கையில
மாராப்பு சுத்தி நிண்டு
களை பிடுங்க நோவுதடி.

வாழை தண்டு மேனியில
வியவுத்த துளி பன்னீரடி
பாவி நானும் ஏங்கி நிற்க
முறைச்சு நீயும் திரும்புறியே.

இடையோடு வளைஞ்சு நீயும்
இறுமாப்பாக் களை புடுங்க
சேலை மீறும் கொங்கை கண்டு
சேர்ந்திருக்க ஆசை வருகுதடி.

கொல்லையில அப்பனுக்கு
கால் இழுத்து போச்சுதென்று
கொள்ளி வெயில் வயலுக்குள்ள
களை பிடுங்க வந்தியோடி.

ஓரம் கொஞ்சம் வாடி புள்ள
ஒட்டி நிண்டு பேசிக் கொஞ்ச
தாடி புள்ள நொந்த கைய
தடவி மெல்ல தாங்கி கொள்ள.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னார் ரமா
இல. 41, சமயபுரம்
உயிலங்குளம்
மன்னார்

## களைபிடுங்கும் வயசுப் புள்ள

களைபிடுங்கும் வயசுப் புள்ள
காளை என் மனசுக்குள்ள
கட்டெறும்பாச் சுற்றி வந்து
கட்டுறியே காதல் கோட்டை

சேற்று வயல் வரப்போரம்
சேலை அள்ளி செருகிடவே
சோலை மலர் நீயென்ன
சொக்க வச்சுப் போறியேடி

தத்தி நீயும் நடக்கையிலே
தவிக்குதடி உள் மனசு
தாமரையா தலை சாய்ந்து
திருடுறியே என் வயசை

கயல்மீனின் கண்ணைப் பார்த்து
கதி கலங்கி தவிக்க
கை வளையல் கலகலப்பும்
கால் கொலுசும் சிணுங்குதடி

அத்தை மகன் நானிருக்க
ஆசையாக நீயும் வாடி
அச்சம் எல்லாம் தள்ளிவிட்டு
ஆனந்த நடனம் செய்வோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாமன் மகள் நீயிருக்க
மனதினிலே என்ன குறை
மாலை சூடி குங்குமமும்
மகிழ்வாக நான் தருவேன்

பாவாடைத் தாவணியே என்
பருவம் தேடும் தேவதையே
பூவோடு நான் காத்திருப்பேன்
பூவிதழில் தேன் சுவைப்பேன்

ஏராலே உழுத வயல்
ஏளனமாய்ச் சிரிக்குதடி
ஏகந்த நினைவு மட்டும்
என்னை பற்றி இழுக்குதடி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவ கிருஷாந்த்
கொடிகாமம் வடக்கு
கொடிகாமம்

## தமிழனே! தலை நிமிர்

காட்சிப் பொருளாகியதே தமிழின்று
காய்களும் நகர்கின்றது தமிழனை வைத்தது
நானே தமிழன் நீயல்ல என்போருமுண்டு
பலராலும் பலவாறாய்க் கொண்டாடும் தமிழும்
பழங்காலப் பாமரனின் ஆதி மொழி தானன்றோ?
மூவேந்தர் காலத்திலும் முற்ப்பட்ட தமிழே
அமுதிற்கும் இனிமை நீயொரு பொது உடமை
குமரிக் கண்டத்தின் குலமகனும் நீயே.
தமிழ் குலம் காக்க வந்த தலை மகனும் நீயே.
திட்டமிட்டு வந்தேறி கயவர் கூட்டமின்றும்
செப்பனிட்டுச் செய்கிறதுனை அழிக்கும் தொழிலை
தாஜ்மகாலிலும் சிறந்து தஞ்சை பெருங்கோவில் தானன்றோ?
அதன் புகழின்னும் அதிசயம் ஆக்கப் படாததுமேனோ?
ஆய கலைக்கும் ஆசானாயிருந்த தமிழனே
ஆதரவின்றி நீயும் தாதியற்று நிற்பதுமேனோ?
தமிழின அழிவிற்க்கு தமிழனே காரணம்
தலை குனிந்து சொல்லுகிறேன் தமிழனாயிருந்தும்
தீர்வு தேடுகையில் தீர்கமாய் தோன்றியதே ஒன்று
தமிழனே தமிழைத் தமிழில் பேசுங்கள் செந்தமிழிலல்ல
வெட்கமின்றி தலைநிமிடத்தி தெரிந்த தமிழில்
தமிழின் பெருமை யாதெனக் கேட்டால்
தமிழென்று சொல்லாதீர் மனிதமென்று சொல்லுங்கள்
தமிழனென்று சொல்லடா தலை நிமிடந்து நில்லடா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழனே! தலை நிமிர்...!

*ஆண்டவன் போலே ஆண்டவர் நாமே*
*ஆயிர மாயிரம் ஆண்டுகளாய்...!*
*மாண்புடன் வாழ்ந்த மண்ணிது தானே*
*மாரினைத் தட்டிச் சொல்தமிழா...!*
*காண்பதைக் கற்றுக் கற்றவை யாவும்*
*கண்ணிய மாக நாம்பகிர்ந்தோம்..!*
*தாண்டவ மாடும் தஞ்சமுற் றோர்க்குத்*
*தாய்நிலம் தந்தே ஏன்மறந்தோம்..?*

*ஆணவம் கொண்டோர் ஆளவே வந்தார்*
*ஆதியில் வந்தோர் அடிமைகளாம்...!*
*காணடா எங்கும் கள்ளரின் கூட்டம்*
*காவினை வாங்கும் கொடுமைகளாம்...!*
*ஏனடா என்றே ஏறினால் கொல்லும்*
*ஈவிலா ஈனப் பிறவிகளாம்...!*
*மானமும் உண்ட மானிட எச்சம்*
*மாய்த்ததன் மிச்சம் அகதிகளாம்...!*

*வேங்கையின் வாலைச் சீண்டியக் கூட்டம்*
*வேதனை கொள்ளும் வீறுடன்வா..!*
*ஏங்கிய கண்ணில் இன்பமும் பொங்க*
*ஏறிடு வெற்றிப் பேருடன்வா..!*
*தூங்கிய நாளை தூக்கிநீ போடு*
*தூக்கிடு நம்தாய் நாட்டினையே..!*
*வாங்கிட வேண்டா விற்றிட வேண்டா*
*வாய்மையும் கொன்றே ஓட்டினையே..!*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் சரண்
வன்னியசிங்கம் வீதி
தாவடி வடக்கு கொக்குவில

## தமிழனே! தலை நிமிர்

சுடுகின்ற யாவும் இங்கு தீயும் அல்ல
சுழல்கின்ற எல்லாமே காற்றும் அல்ல
விரிகின்ற கோபத்தை நீ மாற்றிடு
விடிவுனை தீண்டிட முன்னேறிடு

அலை வந்து அடித்தாலும் வலி தோன்றுமா
நுரை தன்னின் வேகத்தில் நிறம் போகுமா
சுடுகின்ற சூரியன் தன் குணம் மாறுமா
உன் கோபத்தின் வீரியம் வெறியாகுமா

பகை சூழ வாழ்கின்ற பாம்பாகிடு
படை கோடி வந்தாலும் பகையாகிடு
வலியோரை நீ தீண்டி பழி வாங்கிடு
பட்ட வலி கோடி மறவாது உறவாடிடு

விடிவுனை நெருங்கிடும் குனியாதிரு
விடிவிலே உருகிடும் மெழுகாய் இரு
முடிவது முடிந்தது முடிவே இல்லை
வருவது வளர்வது விடிவின் எல்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருமியே சாவதில் சிறப்பும் இல்லை
இரு விழி நனைப்பதில் பெருமை இல்லை
சா வரும் ஒருமுறை பயத்தை விடு
சுயத்தை நீ இழக்கு முன் கரத்தை கொடு

எழுவது என்பதில் பெருமை இல்லை
விழும் நொடி எழுவதே இறுதி எல்லை
அடிமேல் அடி விழும் அணையாதிரு
ஆதிக்க வெறித்தனம் அழித்தே எழு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செ. இஸ்ஸத்
99, ஹுதாப் பள்ளி வீதி
மிச்நகர்
ஏறாவூர்

## எரிமலையும் சிறு பொடியே!

*முயன்று முயன்று
முட்டி மோதி
முடியும் மனமே எழுவாய்!
இயன்ற வாழ்வில்
இயலாமை ஏது?
இதயம் உறுதி கொள்வாய்!*

*மடமை தொலைத்து
மிடிமை ஒய
மலையும் பெரிதாய் எண்ணாய்!
படையே சேர்ந்தும்
பணபலம் தேர்ந்தும்
பாதம் உறுதிகள் காண்பாய்!*

*வளங்கள் யாவும்
வாய்ப்புகள் கண்டு
விவேகம் கொண்டு வெல்வாய்!
நிலமை நெர்ந்து
நாழிகை பார்த்தால்
நாளைய வாழ்வினை இழப்பாய்!*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயரப் பறந்து
உணவுகள் தேடி
ஊக்கம் தொலைப்பதில்லை பறவை!
முயற்சி ஒன்றே
மீட்சிமை எண்ணி
மறுநாள் விரித்திடும் சிறகை!

ஆறாம் அறிவை
ஆய்ந்து நல்ல
ஆளும் உலகினைப் படைப்போம்!
தேறாப் பாதை,
தோல்விகள் காணாத்
தீபம் ஏற்றி முடிப்போம்!

எரியும் தீபம்
எரியா தணைந்தால்
எரிமலைத் தீயை ஏற்போம்!
சிறிதாய் இன்றிச்
சீற்றம் கொண்டால்; அதைச்
சிறுபொடி யாக்கியும் பார்ப்போம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலணையூர் ரஜிந்தன்
(பாலசுந்தரம் ரஜிந்தன்)
வேலணை கிழக்கு - 04
வேலணை
யாழ்ப்பாணம்

## எரிமலையும் சிறு பொடியே...

நெஞ்சில் வீரத் திமிரு
தமிழே எங்கள் உயிரு
அஞ்சப் பகை வென்று
அதிரும் வெற்றிச் சங்கு!

நெருப்பாய் எரியும் வீரம்
நெருங்கும் பகை எரியும்
புதிதாய் கிழக்கு உதயம்
புரட்சி மீண்டும் வெடிக்கும்!

சங்கத் தமிழ் வீரம்
சளைக்காது ஒரு நாளும்
சாவைக் கண்டு அஞ்சும்
நிலையில் இல்லை நாமும்!

ஆண்டான் எங்கள் பாட்டன்
ஆதித் தமிழன் முப்பாட்டன்
அந்தக் குருதி உடல் மேவும்
அடங்காமல் எழுச்சி கொள்ளும்!

எரிமலையும் சிறு பொடியாக
எதிர் கொள்ளும் நெஞ்சில் உறுதி
எதிரே எமன் வரினும்
எதிர்க்கும் யுக்தி எம் சக்தி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆ. நடராஜன்
4/671, செட்டியார் குத்தகை
ஆயக்காரன் புலம் - 2
வேதாரண்யம் (வட்டம் )
நாகை (மாவட்டம் )

## எரிமலையும் சிறு பொடியே!

தோல்விகள் உன்னைத் துரத்தி வரலாம்
தோள்களில் சுமையை ஏற்றி வைக்கலாம்
நாள்கள் எல்லாம் கசந்தே போகலாம்
நண்பர்கள் கூட எதிரிகள் ஆகலாம்
அனைத்தையும் தாங்கும் இதயம் பெறுவாய்
அகிலமும் வென்றிட உறுதி கொள்வாய்
சூழ்ச்சிகள் செய்தே துரோகமும் நெருங்கும்
வீழ்த்தி மகிழ்ந்து விளையாடிப் பார்க்கும்
கழுத்து வரைக்கும் சகதியில் புதைத்து
அழுத்தும் துன்பம் எழுந்தே வரலாம்
வருவது வரட்டும் ,
எதிர்கொள்ள அறிந்திடு
வரிப் புலியாய் உறுமியே திரிந்திடு
எரித்திடும் இன்னல்கள் எட்டியே விரட்டி
ஏறு போல் உழைத்தே பீடு நடை போடு
கரியின் பலத்துடன் பரியாய்ப் பறக்க
எரிமலை எல்லாம் சிறு பொடியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐ. துஷ்யந்தன்
(காதல் புவியரசன்)
12A நகரசபை விடுதி
மன்னார் வீதி
குருமன்காடு
வவுனியா

## வறுமை

குடிசை வீடு
குதூகலம் தருகிறது
கேட்ட பாடல்

○○

அழுகின்ற குழந்தை
அழகாய் இருக்கிறது
வரைந்த ஓவியம்

○○

ஏழை வீடு
ஏக்கம் தருகிறது
பழைய நினைவுகள்

○○



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்ரன் மங்கேஷ்
இலண்டன்

## வறுமை

குப்பி விளக்கு
எரிந்து கொண்டிருக்கிறது
ஏழையின் வயிறு.

○○

கிழிந்த உடை
கந்தலாய் இருக்கிறது
பழைய காகிதங்கள்.

○○

ஏழ்மை நிலை
கூடிக்கொண்டு போகிறது
பொருட்களின் விலை.

○○



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அ. மயூறன்
பலாச்சோலை
மட்டக்களப்பு

## வறுமை

புகைப்படம் எடுத்ததும்
கழுவிக் கொடுக்கின்றாள்
தோழியின் சட்டையை

OO

ஓலைக் குடிசை
பலமிழந்து காணப்படுகிறது
வளவுடப்பு நாய்

OO

பனையோலைப் பாய்
சுருண்டு போய்க் கிடக்கின்றது
பசியோடு குழந்தை

OO



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வறுமை

வயிற்றுப் பசி
குறைந்து கொண்டே போகிறது
குடத்து நீர்

OO

சோற்றுப் பானை
பொங்கி வழிகிறது
பசித்தவரின் கண்ணீர்

OO

விடா முயற்சி
தொடர்ந்து கொண்டே போகிறது
விவசாயி கடன்

OO



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீனு செந்தில்
1174, வெங்கடேச பெருமாள் தெரு
ஊரப்பாக்கம்
காஞ்சிப்புரம் மாவட்டம்

## வறுமை

பசியில் அழுத குழந்தை
சுருண்டு படுத்திருக்கிறது
அடுப்படியில் பூனை

○○

முற்றுப் பெற்ற ஓவியம்
கையேந்தி நிற்கிறது
பசியில் குழந்தை

○○

விளைந்த நிலம்
வறண்டு கிடக்கிறது
தாயின் மார்பு

○○



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மயிலையூர் மோகன்
மயிலிட்டி வடக்கு
காங்கேசன்துறை
யாழ்ப்பாணம்

## துரோகம்

நடமாடும் அன்பு
இடம்மாறிச் செல்கின்றது.
நட்பின் குரோதம்

○○

காதலின் மேன்மை
சாதலில் நிறைவுறுகின்றது.
பாதகரின் விரோதம்

○○

எண்ணிய கருமம்
கண்முன்னால் தெரிகிறது.
பண்ணிய துரோகம்

○○



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவலர் தண்முகநம்பி
தரகம்பட்டி - 621311,கடவூர் வட்டம், கரூர் மாவட்டம்
தமிழ்நாடு

## உனக்காகவே நான் வாழ்கிறேன்!

திருவிழாக் கூட்டந் தன்னில்
தேவதையே உனைநான் கண்டேன்!
அருகினிலே வந்தாய்! ஏதோ
ஆகாய மின்னல் போல
இருவிழியால் தாக்கி என்னை
இதயத்தைக் கவர்ந்து சென்றாய்!
ஒருவழியாய் மீண்டும் நானும்
உயிர்பெற்று விழித்துப் பார்த்தேன்!

தெருவழியே தோழி யோடு
தேர்போல அசைந்து சென்றாய்!
நறுமலரால் அலங்க ரித்து
நகர்ந்துவரும் தெய்வம் போல
இருள்தன்னில் ஒளியாய் வந்தே
என்மனத்தை பறித்துச் சென்றாய்!
மருள்வந்தே என்னைப் பற்ற
மயங்கித்தான் நின்றேன் நானும்!

பெருகிவரும் வெள்ளம் போல
பெருங்கூட்டம் வரவும் அங்கே
கருமுகிலின் கூட்டத் துள்ளே
கலைநிலவும் மறைந்த தைப்போல்,
சிறுநிலவும் ஒளிந்து கொண்டாள்
சிறகடித்துப் பறந்து சென்றாள்!
வருவாய்நீ என்றே இங்கு
வாழ்கின்றேன் உனக்காய் நானும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரமானந்தம் தியாகராஜா
காயான்மடு
கன்னன்குடா
மட்டக்களப்பு
இலங்கை

## உனக்காகவே நான் வாழ்கிறேன்

நடைப்பிணமாய் நான் அலைந்து
இடையில் வரும் இன்னலறிந்து
விடைதேடி வந்தேன் நான்...
குடையால் மறைத்துச் சென்றாய் நீ...!

உள்ளத்தின் குமுறல் ஓசை
தள்ளிக் கொண்டு வெளி வந்ததால்
பள்ளி கொள்ள முடியாமல்
எள்ளி நகைத்தாய் நீ அங்கே...!

வாழ்த்து அட்டைகள் வாங்காமல்
வரைந்த அட்டைகளோ ஏராளம்
ஆழ்மனதில் உனை வைத்தேன்
ஆவாரம்பூ மேனி உன்னை...!

தாலாட்டு மெட்டு இசைத்து
தள்ளாடும் மழலை ஒன்று
கோலாட்டம் ஆடி நின்றான் அங்கே...
கோகுலத்தில் கண்ணன் அவன்...!

ஊடலுக்காய் வந்த சொந்தம்
தேடலிலே கிடைத்ததென்று
ஊரறிய வந்து நின்றாய் நீ...
உனக்காக வாழ்கிறேன் நான்...!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ச.ப.சண்முகம்
எழுவாம்பாடி

## உனக்காக நான் வாழ்கிறேன்

முத்தமிழ்ச் சுடரே முல்லைக் கொடியே
முத்தத்தி லான முழுமதி நிலவே
சத்தம் இன்றியே சாதனை படைத்திட்ட
இரத்தத்தில் குடிபுகுந்த ராக்கால ஓவியமே...

கள்ளிக் காட்டு கள்ளிப் பழமே
அள்ளிப் பருகிட ஆசை தீர்ந்ததே
சொல்லுமுன் சொல்லில் சொடக்கத்தைக் கண்டேன்
சொப்பனத்தி லூறியச் சொக்கத் தங்கமே..

மின்னலென வீசிடும் மின்சார ஒளியாய்
என்னுள்ளே தான் என்றும் தேக்கியுள்ளேன்
கண்ணைத் திறந்து காண்பிக்கின்றேன் பார்...
ராதையாய் அதில் ராணியைப்போல நீ!...

அன்பெனும் சொல்லில் அழகாய் கோர்த்து
பண்பெனும் பூமாலையை பாசத்தோடுச் சூடி
வான்வெளிக் கூட்டமெலாம் வந்திங்கு வாழ்த்திட
பெண்ணே உனக்காகவே நான் வாழ்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முனைவர் முகிலை பாரி
முகிலன்குடியிருப்பு
அகஸ்தீஸ்வரம் - 629701
குமரி மாவட்டம்

## என்னுயிர் உன்னிடத்தே

கன்னியே உன்னெழில் கண்டநாள் முதலதாய்
என்னுயிர் உன்னிடத்தே என்னதான் மாயமோ?
கன்னலும் தோற்றிடும் கனிவுடன் பேசியே
மன்னவன் என்னையும் மடியினில் சாய்த்ததேன்?

புன்னைபோல் பூத்திடும் புன்னகைச் சோலையே
நின்னடி சரண்புகும் நிலைமைதான் ஆனதேன் ?
தேன்துளி தெளித்துநீ தேகத்துள் நுழைந்தே
வான்துளி போலஎன் வாழ்க்கையில் பொழிகிறாய்

மான்விழி மாதுஉன் மாங்கனி கன்னத்தில்
பொன்னொளி போர்த்திய பௌர்ணமி காய்க்குதே
சின்னஇதழ்ச் சிமிழிலே சிலதுளி அமுதமாய்
தின்னநீ கொடுப்பதால் திகட்டவும் இல்லையே

மன்மதப் போரிலே மஞ்சமாய் ஆனவள்
தன்னிரு தனங்களால் தணல்தனை மூட்டினாள்
சின்னவோர் சிற்றிடை சிதைவுறா முன்னமே
மின்னலே மீட்டுவேன் மிகுந்தெழும் காதலால் !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நா. காளி ராசா
244, லிங்கங்கள்
திருகோணமலை

## என்னுயிர் உன்னிடத்தே

கட்டு உடல் மொட்டழகி
கரு வண்டு கண்ணழகி
சொட்டுதிர இதழ் அழகி
சுண்ணாம்பு நிறத்தழகி

கன்னக் குழியழகி
கார்கூந்தல் பேரழகி
உன்னுடலில் என்னுயிரு
உறைஞ்சிருக்குத் தெரியுமோடி

தென்னம்பூச் சிரிப்பழகி
தேன் மதுரப் பேச்சழகி
உன்னிதயப் பொறிமுறைக்கு
உயிர்க்காவல் நானேடி

சங்குக் கழுத்தழகில்
சரணாகதி என்னுயிரு
உன்
தங்கக் கரமிரண்டில்
தவமிருக்கு என்னுயிரு

கொள்ளை அழகிரண்டில்
குடியிருக்கும் என்னுயிரை
குணந்தவறி நடந்து அதன்
கூட்டினை நீ கலைத்திடாதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழை மடல் போல
வார்த்த இரு கால் அழகில்
வாடிக் கிடக்குதடி
வார்த்தையின்றி என்னுயிரு

பால் நகத்தில் மைப்பூச்சாய்
படிஞ்சி கிடக்குதடி
உனக்கு
பாதபூசை செய்வதற்கு
பாழ்பட்ட என்னுயிரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புன்னகைவேந்தி
ஸமான் லாபிர்
இங்கிலாந்து

## உயிருக்குள் உருவானாய்

கண்ணே கலைமானே
துள்ளிவரும் பூஞ்சிட்டே
அள்ளியுன்னைக் கொஞ்சயிலே
எந்தனுள்ளம் துடிக்குதடி
கண்ணே கலையழகே
மெய்வடிவம் உனதுருவே
மழலைமொழிப் பேச்சினிலே
கன்னிவிட்டாய் என்மனதை...!

சித்திரமே சிரிப்பழகே
வாசமுள்ள மலர்த்தேனே
நித்தமுந்தன் வாயினிலே
பூக்களும்தான் உறங்கிடுதோ
கிள்ளைமொழி கொண்டெந்தன்
சிந்தையிலே பள்ளிகொண்டாய்
வாய்மொழி காட்டியெந்தன்
உயிர்மீது குடிகொண்டாய்....!

எத்தனையோ இன்பங்கள்
இருந்தாலும் இவ்வுலகில்
உன் மழலைமொழி தவிடத்திங்கு
வேறு ஒன்று வென்றிடுமோ
வயிற்றினிலே கருவானாய்
என்னுயிருக்குள் உருவானாய்
வாழ்வுக்கே வரமானாய்...!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்துல் ரஹ்மான்
38 - இந்திரா நகர்
பட்டூர்,
மங்காடு,
சென்னை - 600 122
தமிழ் நாடு,
இந்தியா.
அலை பேசி : 9840986706

## உயிருக்குள் உருவானாய்

ஈருடலில் கண்ட சுகம்
வேறுயிராய்ப் பிறப்பெடுத்துத்

தூய்மை மிகு உறவினிலே
தாய்மை யெனும் பெயரளித்து

உயிருக்குள் மெய்யாகப்
பயிரான பசுந்தளிரே

கண் விழித்துப் பார்க்கையிலே
கண்ட சுகம் கோடி யன்றோ,,,,,

என்னுதிரம் நானளித்து
உன் புகழைக் காத்திருப்பேன்

கண்ணுக்குள் கருமணியாய்
எந்நாளும் உனைச் சுமப்பேன்,,,!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எணேய் வெறும் நிலத்தில இருக்காத...

இஞ்ச வா என்னட்ட இருக்கிறது இந்த ஒரு புற்பாய் மட்டும் தான்.

இதில வந்து இரு மோனே!...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று கூறித் தட்டுத்தடுமாறி அமர்ந்தாள் அந்த முதியதாய்.

அம்மா!... இங்க வேற யாரும் இல்லையோ?...

உங்கட பிள்ளையள்??? ஆரும் இருக்கினமோ என்று பணிவாக வினவினான் கமல்.

ஓம் மோனே!...

உந்தக் குறுக்கால போன சிங்கள ஆமிக்காரன்ர கடைசிச் சண்டையில

செல்விழுந்து என்ர அவர் போய்ச் சேர்ந்துட்டார்.

எனக்கெண்டு இருக்கிற ஒரே ஒரு ஜீவனுக்காட்டித் தான் இந்த வெறும் கட்டை கிடந்து தவிக்குது மோனை என்று அந்தத் தாய் கூறவே, அவளது கண்களிலிருந்து கண்ணீர் தாரையாக வழிந்தோடியது.

அம்மா! கலங்காதீர்கள் என்று அத்தாயை அவன் தேற்றவும்...
உடனே தலையணை உறையுள் இருந்து அழகிய இளைஞனின் படத்தைக் காட்டி...

இவன் தானையா என்ர புள்ள...

சன்னதி முருகனுக்கு ஆறு வருசமாக் கந்தசட்டி விரதம் புடிச்சு பெத்தெடுத்த சிங்கக்குட்டி.

எண்ட புள்ள தாய்மண்ணைக் காக்க புறப்பட்டு பதினைஞ்சு வருசமாப் போச்சு.

பத்து வருசத்துக்கு முன்னம் லீவில வந்து அம்மா சமைச்சுத் தாணை எண்டு கேட்டு கோழி அடிச்சுச் சாப்பாடு கொடுத்து விட்டனான்.

என்ட செல்லத்தோட வீட்டை வந்த மற்றத் தம்பி உயிரோட தப்பி வந்து வவுனியாவில கண்டனான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மா உங்கட மகனும் ஆமிக்காரங்கட எல்லையை நோக்கித்தான் ஓடி வந்தவன். நாங்கள் கட்டம் கட்டமாக ஓடிவரும்போது பிரிந்து விட்டோம்.

நானும் எனது குடும்பத்திடம் தற்போது தான் உறவிணைப்பில் இணைந்தேன்.

கவலை வேண்டாம் அம்மா. இறுதி நாள் கூட கண்ணனை நான் ஓடிவரும் போது கண்டேன்.

அவன் நிச்சயமாய் உங்களை வந்தடைவான் என்று அந்தத் தம்பி ஆறுதலளித்துச் போனான்.

அன்றிலிருந்து இன்றுவரை காணாமல்போனோர் பட்டியலிலும், தடுப்பு முகாம்களில் தேடி அலைந்து விடையற்றவளாக நோய்வாய்ப்பட்டு உறவுகள் யாருமின்றி உண்டது பாதி உண்ணாதது பாதியாக...

எப்போது என்மகன் என்னிடம் வருவான் என்ற ஏக்கத்தோடு வாழ்ந்து வருகிறேன் என்று கூறி முடிப்பதற்குள் எனது கண்களும் நீரால் நிறைந்தன.

மழையும் ஓய்ந்துவிட

விடையற்ற வினாவின் தாயின் ஏக்கத்திற்கு

விடைகூற முடியாமல்... கவலை வேண்டாம் உங்கள் மகன் உங்களிடமே வருவான் அம்மா!... என்று கூறி மீண்டும் கவலையுடன் நடக்கின்றான் கமல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராஜதுரை. சதீஸ்குமார்
இல 152, 2ம் பகுதி
அனிஞ்சியன் குளம்
யோகபுரம், மல்லாவி

## எப்போது வருவாய் என்னிடத்தே!

மோகனும் சுயாவும் சிறுவயதில் இருந்தே இணைபிரியாத நண்பர்கள்.

நாட்களும் காலங்களும் நகர்ந்தோட நட்பு காதலாக மாறியது. இருவருக்குள்ளும் அன்பும் பாசமும் அதிகமானது.

மோகனுக்கு பாடசாலை படிப்பு முடிந்ததும் பல்கலைக்கழகத்துக்கு தெரிவானான். சுயா பிரிவின் வலியோடு வழியனுப்பி வைத்தாள்.

மோகனும் கவலையோடு படிப்புக்காக வெளியூர் சென்றான். இருவருக்குமே பிரிவது கஸ்ரமாக இருந்தாலும் விடுமுறையில் சந்திக்கலாம் என்று மனதை தேற்றிக்கொண்டனர்.

இருவரும் பிரிந்து இருந்தாலும் அலைபேசியில் பேசிக்கொள்வார்கள். மோகன் விடுமுறையில் ஊருக்கு வரும்போது இருவரும் சந்தித்துக்கொள்வார்கள்.

இப்படியே இன்பமாய் நகர்ந்த இவர்கள் வாழ்க்கையில் பிரிவு ஏற்பட்டது.

ஒரு வாரமாக இருவருக்கும் இடையே எந்த தொடர்பும் இல்லை.

மோகன் கவலையோடு பல்கலைக்கழகம் செல்ல தயாரானான். அப்பொழுது மோகனுக்கு ஒரு கடிதம் கிடைத்தது. அந்த கடிதத்தில்" மோகன் நான் உன்னை உண்மையாய் காதலிக்கிறேன். உன்னை ஏமாற்றியதாய் நினைக்காதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ படித்து பட்டம் வாங்கும் வரை நான் உன்னோடு பேசமாட்டேன். நான் வெளிநாடு செல்லப்போகிறேன். விதியிருந்தால் சந்திப்போம்" என்று எழுதியிருந்தாள்.

மோகன் பிரிவை தாங்கமுடியாமல் தவித்தான். இருந்தாலும் மனதைத் தேற்றிக்கொண்டு படிப்பைத்தொடர்ந்தான்.

இடையிடையே அவள் நினைவுகள் வந்து போனாலும் முழுமையாக தன் கவனத்தை படிப்பிலே செலுத்தினான். படிப்பை முடித்து பட்டம் பெற்றான். நல்ல வேலையும் கிடைத்தது.

சிலநாட்கள் செல்ல சுயாவை பற்றி விசாரிப்போமென அவள் வீட்டிற்குச்சென்றான்.

அங்கே அவனுக்கு அதிர்ச்சியொன்று காத்திருந்தது.

சுயா வீட்டிலே குழந்தையுடன் நின்றாள். மோகனைக் கண்டதும் ஓடிவந்து கட்டியணைத்து முத்தமழைப் பொழிந்தாள். இவன் என்னசெய்வது என்று தெரியாமல் திகைத்தான்.

உடனே சுயா எங்கே உன் கணவன் என்றான். தயக்கம் எதுவுமின்றி நீதானே என் கணவன் என்றாள்.

மோகனுக்கு என்ன சொல்லுவது என்றே தெரியவில்லை.

அவள் குழந்தையை அவன் கையில் கொடுத்து இது நீ எனக்கு கொடுத்த காதல் பரிசு. உன் படிப்பு குழம்பிடக்கூடாது என்பதற்காகவே இதை மறைத்தேன். என்னை மன்னித்து விடு.

இத்தனை நாட்களாக" நீ எப்போது வருவாய் என்னிடத்தே" என காத்திருந்தேன் என்றாள்.

அவன் மகிழ்ச்சி பொங்க இருவரையும் கட்டியணைத்து முத்தம் செய்தான். அவன் கண்களில் ஆனந்தக்கண்ணீர் வழிந்தது. மகிழ்வுடன் இருவரையும் ஏற்றுக்கொண்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எப்போது வருவாய்? என்னிடத்தே!

விமலன் மற்றும் திவ்யா இருவரும் மைத்துனர் உறவு கொண்டவர்கள்.

முறைப்பையன் முறைப்பொண்ணு ஆனாலும், நீண்டகாலக் குடும்பப் பகை காரணமாக இருவீட்டாரும் பிரிந்து வாழ்கிறார்கள்.

சிறுவயதிலிருந்தே விமலனிற்குத் திவ்வியாவையும், திவ்வியாவிற்கு விமலனையும் மிகமிகப் பிடிக்கும்.

இவ்விருவரிற்குமான அன்பு கல்லூரிக் காலங்கள் உருண்டோடக் காதலாக மாறியது.

விமலன் காதலை வெளிக்காட்ட முயன்றவிடத்தும் திவ்யா உள்மனதின் விருப்பத்தை வெளிக்காட்டாது முகஞ்சுளித்து வருகிறாள்.

அடுத்தநாள் உயர்தர மாணவர் பிரிவுபசார விழாவில் இருவரும் தமது காதலை வெளிப்படுத்த உள்ளனர்.

விடிந்திடாத இரவினில் அணையாத விண்மீன்களாய்த் திவ்யாவின் கண்கள் ஒளிர்ந்து கொண்டிருக்கின்றன.

தாவணிக்காலக் கனவுகள் எப்போது?...

விடியுமென்ற ஏக்கத்தினூடாக விரகதாபத்தை உண்டுபண்ண, நெஞ்சில் தேமல் படர்தலால் பசலையுடன் அங்குமிங்கும் நித்திரை இன்றிப் புரண்டு படுத்தாள் திவ்யா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏக்கத்துடன் அவளிற்காகவே! தூக்கமின்றி விழித்திருந்த தன்மையாய்,

எப்போது? விடியுமென்ற தொனியிலே!... சாமக்கோழிகள் கூவுகின்றன.

நாளைய விழாவில் தனது காதலின் சேர்தல்

நினைவுகளோடு கண்ணயர்ந்தாள் திவ்யா.

திவ்யா!... எடிபுள்ள திவ்யா!...

பிரிவுபசார விழா ஞாபகம் இல்லாமல் நல்லாத் தூங்குறாய்.

வேகமா எழும்பு புள்ள...

நேரம் ஆறு மணியாப்போச்சு...

என்றவாறு மகளின் நிலையறியாத தாயவளோ! அழைக்கிறாள்.

ஓ... அம்மா இதோ எழும்பீட்டன் அம்மா...

அச்சச்சோ பிந்தியுறங்கிய அசதியில் கண்ணயர்ந்து விட்டேனே!...

எனத்தன்னைத் தானே திட்டிக்கொண்டு பம்பரமாகச் சுழன்று தனது கருமங்களில் ஈடுபடலானாள்.

அப்போது வாசலின் முன்புற வீதியில் வழமைபோல் ஈருருளியின் மணியோசை...

எட்டிப்பார்க்கிறாள் ஏங்கிய விழிகளுடன் சைகைபுரிந்த வண்ணமாக நகர்கின்றான் விமல்.

சீ போடா... என்று வழமையான முகபாவனையோடு,

அப்பா பாத்துட்டா செத்தாடா மவனே??? ன்னு அச்சுறுத்தும் பார்வையோடு உள்ளே நகர்ந்தாள் திவ்யா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாவணியில் இரட்டைச்சடை பின்னிச்

சலங்கை ஓசையோடு... அலங்கார நடைநடந்து வரும் திவ்யாவின் அழகிற்கு பின்னால் அலையாத வாலிபவட்கள் என்று யாருமே இல்லை.

ஆனால்...

மன்மதபாணத்தால் விமலனிடம் மாத்திரம் தன்மனதைப் பறிகொடுத்து மனதுள் காதல் ஆசையினை மறைத்துவந்த திவ்யாவோ இன்று தனது சம்மதத்தைக் கூறும் மகிழ்வோடு தயாராகின்றாள்.

இதேவேளை விமலனும் பூக்கடைக்குச் சென்று சந்திக்க வரப்போகும் தனது தேவதைக்காய் அழகிய மலர்ச்செண்டை வாங்கியவனாய்க் கல்லூரி சென்று...

"எப்போது வருவாய் என்னிடத்தே!..." என்ற ஏக்கத்தோடு காத்திருந்தான்.

இரட்டிப்பு அழகுடன் கல்லூரி நோக்கி வானதேவதையாய் நடந்து செல்கிறாள் திவ்யா.

திடீரெனக் காத்திருந்த கழுகுகளாய் இருவர் அவள் கரத்தைப் பற்றினர்.

"யார் நீங்க??? என்னை விட்டுடுங்க...

யாராவது காப்பாற்றுங்க..." என ஓலமிட்டுக் கதறியும்,

அந்தக் காமுகர்கள் அவளை வீதியின் மறைவுப்பகுதிக்குள் இழுத்துச் சென்று கூட்டாகக் காவுகொண்டனர்.

அங்கே ஈராறு கண்களிற்கு விருந்தாகிக் கசக்கி எறியப்பட்டுக் குற்றுயிராய்க் கிடந்தாள் திவ்யா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்தனையோ பேர்நடுவில் தேவதையாய் பூத்துக் குலுங்கியவள்
கட்டாந்தரையில் இதழொடிந்த மலராய்க் கிடக்கிறாள்.

அவளது வாய் மட்டும்...

விமல் விமல் விமல்... என்று உச்சரித்து இருவிழியும் மூடிவிட....

அங்கே விமலின் கையிலுள்ள மலர்ச்செண்டு கைதவறி வீழ்ந்து
சிதைகிறது.

கனத்த மனதுடன் வீதிக்கு ஓடிச்சென்று எப்போது வருவாள்
என்னவள்???... என்று,

இலவுகாத்த கிளியாகத் தவிப்புடன் வீதியை நோக்குகிறான்.

(அவனது காத்திருப்பு கானல்வடிவில் தூரதர்சனமாக விமலனோ!...
இலவுகாத்த கிளியானான்.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

mு. திருமாவளவன்

## எப்போது வருவாய் என்னிடத்தே

பிஞ்சுக் கால்கள் நெஞ்சில் மிதித்திடப் பனித்தன ஆழ்முகியின் கண்கள்.

நெடுநாள் தவத்தின் பலனாக இப்போது கிடைத்த வரமாக எண்ணி ஆனந்தத்தில் மூழ்கினாள் ஆழ்முகி.

ஆசைக் கணவனை அன்போடு பார்க்கும் பார்வையில் அவளின் நன்றிகள் ஆயிரம் வார்த்தைகளின் அவசியம் ஏதுமின்றி ஒலித்தன.

உறவுகள் கூடி இருக்க ஒருவரும் அறியாமல் அவள் விழியில் வழிந்த ஆனந்தகா கண்ணீரைப் பார்த்து அவள் கணவன் அகம் மகிழ்ந்தான்.

புது மலரென்ப் பூத்துக் குலுங்கிய குழந்தையுடன் தனிமையில் ஆழ்முகியும், அவள் கணவனும் ஆரவாரம் இன்றி அமைதியாய் ஒருவரை ஒருவர் பார்த்து இதயத்தை ஆசுவாசப்படுத்திக் கொண்டனர்.

"என்னங்க எத்தனை நாள் கனவு இது. எவ்வள்வு அவமானங்கள். எத்தனை இடங்களில் புறக்கணிப்புகள். பத்து வருட வலிகள் இப்போது ஒற்றை வரமாக வந்துள்ளது" என்று தன் கணவனிடம் மகிழ்ச்சித் ததும்ப மெல்லிய குரலில் கூறினாள் ஆழ்முகி.

"ஆமாம்! ஆழ்முகி. இனி வருத்தம் எதுவுமில்லை. நீ எதையும் நினைத்து வேதனைப்பட வேண்டிய அவசியம் இல்லை. இந்தக் குழந்தை இனி நம் வாழ்க்கையை என்றும் வசந்தமாக்கும்" என்று கணவனும் ஆறுதல் கூறினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“என்னங்க பிறந்த குழந்தைக்கு என்னப் பெயர் வைக்கலாம் சொல்லுங்க” என்று ஆசையாக அவள் கணவனிடம் கேட்டுக் கொண்டிருந்த பொழுது” எங்கே! எங்கே! எங்க வீட்டு வாரிசு” என்று சத்தமிட்ட படி ஓடி வந்த மாமியாரைப் பார்த்து சில கணங்கள் மௌனமாய் இருந்தாள் ஆழ்முகி.

“வயித்துல ஒரு புழுப் பூச்சு தங்கல. ஆனா அந்த வருத்தம் கொஞ்சம் கூட இல்லாம தினமும் மினிக்கிகிட்டு வேலைக்குப் போயிடுறா வெக்கமே இல்லாம” இந்த வார்த்தைகள் எப்போதும் போல இப்போதும் அவள் செவிகளில் ஒலித்தன.

சட்டெனக் கேட்ட குழந்தையின் அழுகுரல் கேட்டு நினைவு திரும்பியவள், மாமியாரை சட்டை செய்யாமல் குழைந்தைக்குப் பாலூட்டத் தன்னைத் தயார் படுத்தினாள்.

ஒரு குழந்தைக்குத் தாயாகிப் பாலூட்டும் அந்த நெகிழ்ச்சியான அனுபவத்தில் முழ்கி இன்பத்தில் திளைத்துக் கொண்டிருந்தவளைத் திடுக்கிடச் செய்தது அழைப்பு மணியோசை.

சத்தம் கேட்டுக் கணத்த இதயத்துடன் கண்விழித்தாள் ஆழ்முகி. அருகில் குழந்தை இல்லை.

“கண்ட கனவின் ஈரம் காயும் முன்னே கண்களில் எப்போதும் போல நீர்த்துளி. மலடி என்னும் மாபெரும் பழியைப் போக்கிட எந்தன் வாழ்வும் தழைத்திட என் அருமைக் குழந்தையே, என்னுயிரே எப்போது வருவாய் என்னிடத்தே என்று ஆழ்முகி மீண்டும் அழத்தொடங்கினாள். ஆனால் அங்கே ஆறுதல் சொல்ல எவரும் இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனா சர்மா
ஈழம்

## எப்போது வருவாய் என்னிடத்தே

உறக்கத்திலிருந்து திடுக்கிட்டு எழுந்த கமலா

வியர்வையைத் துடைத்தபடி கடிகாரத்தை நோக்கினாள். மணி ஒன்றைத் தொட்டது. மனதில் ஏதோ பதட்டம் தோன்றிட விடியும் வரை காத்திருந்து குளித்து கோவிலுக்குச் சென்றாள். வழமைபோல் கண்ணீரை இறைவனுக்குக் காணிக்கையாக்கிவிட்டு மெல்ல பிரகாரத்தில் சாய்ந்து அமர்ந்து மகனின் நினைவுகளில் மூழ்கினாள்...

"அம்மா நாளைக்கு நேர்முகத்தேர்வுக்கு புது உடுப்பு எடுக்கவேணும் ஒரு மூவாயிரம் தாருங்கள்" என்றான் கபில்.

திடீரென மகன் பணம் கேட்டதும் தடுமாறிய கமலா தன் வளையல் ஒன்றைக் கழற்றி மகனிடம் கொடுத்தபடி,

"இந்தாடா தம்பி இதை அடகு வைத்து உடுப்பு எடு" என்றாள் தாய்.

தயக்கத்துடன் வளையலை வாங்கியவன் தாயின் கன்னத்தில் பரிவுடன் தடவிக் கொண்டே," இந்த வேலை எப்படியும் கிடைத்துவிடும் அம்மா, முதல் மாத சம்பளத்தில் திருப்பித் தருகிறேன்" என்று கூறிவிட்டு விசிலடித்தபடி கடைக்குப் புறப்பட்டான்.

கமலாவும் மகனின் செயலில் நெகிழ்ந்தபடி

"இப்படித்தான் உன் அப்பரும் நயந்து பேசுவார்" என கூறி சிரித்தபடி வழியனுப்பி வைத்தாள் .

பின் மதியச் சமையலை முடித்தவள் மகனின் வருகைக்காக காத்திருக்கலானாள். பொழுதாகியும் கபில் வரவில்லை. பதட்டத்துடன் அயலவரை அழைத்துக் கொண்டு காவல் நிலையம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்று மகனைக் காணவில்லை என முறைப்பாடு கொடுத்தாள். நாட்கள் நகர்ந்து வாரமாகி மதங்களுமாகியது. மகன் வரவில்லை. தினமும் கோவிலுக்கு செல்வதும் மகன் கிடைக்க பிரார்த்தனை செய்வதுமாக நாட்களைக் கடத்துகிறாள்.

திடீரென கா...கா... என காகத்தின் அலறல் காதில் ஒலிக்க சுயநினைவுக்கு வந்தவளாய் வீட்டை நோக்கி நடக்கலானாள்.

எதிரே உரையாடிக் கொண்டு வந்த இருவரில் ஒருவர்" அட இன்றும் ஒரு அநாதைப்பிணம் எரியூட்ட வருகிறதாம் , வைத்தியசாலையில் இருந்து தகவல் கிடைத்தது" என அவர் கூறியது கமலாவின் காதுகளில் விழுந்தது... அதைக் கேட்ட நொடியில் தடுமாறிய நடையை சரிசெய்தபடி மனதார மகனிடம்... கபிலா!" எப்போது வருவாய் என்னிடத்தே" என கேட்டபடி நடையைத் தொடர்கிறாள் அந்த அன்புத்தாய்..

அடகுக் கடையிலிருந்து பணத்துடன் வெளியே வந்த கபிலை இரண்டு திருடர்கள் அவன் பிடரியில் பலமாகத் தாக்கி பணத்தைப் பறித்துப் போனதையும், அதைத் தொடர்ந்து அவன் கோமாவில் ஆறுமாத காலமாக வைத்தியசாலையில் சுயநினைவின்றி இருந்து அன்றிரவு உயிர் துறந்ததையும் அறியாதவளாக.......

A. KUGAN
72, 2nd LANE
ANANDA PURI
TRINCO



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேடல் கலை இலக்கிய அமைப்பின் இலக்கியப் பயணத்தின் ஓர் மைல் கல்லாக ஓராண்டு நிறைவுப் பெருவிழா அமைகின்றது.

தமிழர்தம் இருப்பினை உறுதி செய்யும் தாளாத எண்ணக்கரு சமூக வலைத் தளங்களில் இழையோடுவதனை யாரும் மறுதலிக்க முடியாது.

ஒரு எழுத்தாளன் தனது எழுது கோலைச் சுதந்திரமாக நகர்த்த முடியாத நிலைமையினை மாற்றியமைப்பதற்கு பலரும் பல்வேறு வழிகளில் முயலுவதனையும் கூறாமலிருக்க முடியாது.

இந்த வகையில் எமது தேடல் இலக்கிய அமைப்பும் அமைதியாக, ஆர்வமாகச் செயற்படும் வகையில் முன்னெடுப்புக்களை நகர்த்திச் செல்கிறது. நாம் வாழ்ந்த வாழ்வின் பதிவுகள் எதிர்காலச் சந்ததியினருக்கு ஒரு வரலாற்று ஆவணமாகத் திகழ வேண்டு மென்பதிலும் கவனம் செலுத்த வேண்டுமென்ற கடப்பாடு எமக்குண்டு.

**கௌ. மோகனகௌரி**

தேடல்

ISBN 978-955-0932-31-3

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org